139

# வக்கீல்

பொதுமக்களுக்கான தமிழ் சட்டப் பத்திரிகை



...ரெஸாக்...

ஜுலை 1953

பொது மக்களுக்குத் தேவையான புதிய சட்டங்களையும் கோர்ட்டு தீர்ப்புகளையும் மற்றும் பல சட்ட விஷயங்களையும் எளிய தமிழ் நடையில் விளக்கும் மாத வெளியீடு.

அணா 4

THE VAKIL ★ TAMIL LAW MAGAZINE

V. S. & Sons

# SWEETS

குணத்திலும்
மணத்திலும்
நிகரற்றது

## வி. எஸ். & ஸன்ஸ்
## பெப்பர்மெண்டுகள்

*

— தயாரிப்பவர்கள் —

தென் இந்திய பெப்பர்மெண்டு தொழிற்சாலை,
கும்பகோணம்.

(Estd. 1925)

## "வக்கீல்"

பொது மக்களுக்கான
உயர்தர தமிழ் சட்டப் பத்திரிகை
ஆசிரியர் கமிட்டி


ஸ்ரீ T. சம்பத், B.A., B.L.,
" G. நாகராஜ பத்தர், B.A., B.L.
" V. தியாகராஜன், B.A., B.L.,
" A. பார்த்தசாரதி நாயுடு, B.A., B.L.,
" S. சாம்பசிவய்யர், B.A., B.L.,
" T. S. வெங்கடராமன், B.A., B.L.,
" R. கிருஷ்ணமாச்சாரி, B.A., B.L.,
" R. கோபாலசாமி, B.A., B.L.,
" C. R. வீரராகவன், M.A., B.L.,
" R. கிருஷ்ணமூர்த்தி, B.A., B.L.,
" P. சுந்தரேசய்யர், B.A., B.L.,
" V. S. விஜயராகவாச்சாரி, B.A., B.L.,
[ஆசிரியர்]


## 1953 ஜூலை முதல் "வக்கீல்" புதிய சந்தா விபரம்

**தனிப் பிரதி ரூ. 0—4—0**
**வருட சந்தா ரூ. 3—0—0**

"வக்கீல்" — பத்திரிகையை கூடிய சீக்கிரமாக ஒரு நான்கு அணு வாரப் பத்திரிகையாக வெளியிடத்திட்டம் வகுக்கப்பட்டிருப்பதால், 1953 ஜூலை முதல் சந்தா விகிதம் மேற் கண்டபடி மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது. வாரப் பத்திரிகையாக மாற்றப்படும் போது தனிப் பிரதி நான்கு அணுவாகவே இருக்கும்; ஆனால் அதற்குத் தக்கபடி வருட சந்தா மட்டில் மாறும்.

இனி விசேஷ வருட சந்தாதார்கள் சேர்க்கப்பட மாட்டார்கள். பழைய விகிதப்படி சாதாரண சந்தா செலுத்தி இருக்கும் நேயர்களுக்கு 1-7-1953 தேதியில் பாக்கி இருக்கும் சந்தாத் தொகை இருக்கும் வரை புதிய விகிதப்படி கணக்குச் செய்து அதிக பத்திரிகைகள் அனுப்பப் படும். இது வரை விசேஷ வருட சந்தாதார்களாகச் சேர்ந்த நேயர்களுக்கும் மேற் கண்டபடி கணக்கு செய்து அதிக மாதப் பிரதிகள் அனுப்பப் படுவதுடன் 3 சப்ளி மெண்டு புத்தகங்கள் வரை அனுப்பப்படும்.

இனி தனிச் சட்டப் புத்தகங்கள் பல பிரசுரம் செய்ய ஏற்பாடு செய்திருக்கிறோம். அவற்றை வருட சந்தா நேயர்கள் யாவரும் தனி சலுகை விலையில் வாங்கிக் கொள்ளலாம். ஆயுள் சந்தாதார்களுக்கு எல்லா 'வக்கீல்' இதழ்களும் எல்லாப் புத்தகங்களும் அனுப்பப்பட்டு வரும்.

## "வக்கீல்" அறிவிப்பு

"வக்கீல்" பத்திரிகைக்குத் தாங்கள் அனுப்பவேண்டிய சந்தாத் தொகையைக் கீழே கண்ட விலாசத்திற்கு மணியார்டர் மூலம் அனுப்பவும்; அல்லது நேரில் ஆபீசில் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளவும். இம்மாதம் முதல் சந்தா குறைக்கப் பட்டிருப்பதை நேயர்கள் கவனிக்கவும்.

இது முதல், மறுபடியும் இது விஷயமாக "வக்கீல்" பத்திரிகை மூலம் அறிவிக்கப்படும் வரையில், "வக்கீல்" பத்திரிகைக்குச் சந்தா சேர்க்கவும், ரசீது கொடுக்கவும், தொகை வசூல் செய்யவும் வேறு எவருக்கும் அதிகாரம் இல்லை.

"வக்கீல்" பத்திரிகைக்காக வெளியூர்களில் சந்தா வசூலித்து வந்த டிராவலிங் ஏஜண்டு திரு. தண்டாங்கோரை T. S. வெங்கடராமன் அவர்கள் 8151 முதல் 8175 வரை நம்பர்கள் உள்ள கவுண்டர் பாயில் அடங்கிய ஒரு ரசீது புத்தகம் கைத் தவறி விட்டதாக ஆபீசுக்கு ரிபோர்ட் செய்திருப்பதால், மேற்படி நம்பர் ரசீதுகள் கொடுக்கப்பட்ட அன்பர்கள், தயவுசெய்து தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் ரசீது நம்பர் தேதி தொகை இவற்றை உடனே ஆபீசுக்குக் கீழேகண்ட விலாசத்திற்குத் தெரிவிக்குமாறு வணக்கமாய்க் கேட்டுக் கொள்ளப் படுகின்றனர். அவ்வன்பர்களுக்கு ஏற்படும் சிரமத்திற்கு மன்னிக்கவும்.

**மானேஜர்,**
"வக்கீல்" தமிழ் சட்டப் பத்திரிகை,
**தபால்பெட்டி 26 : : கும்பகோணம். (S.I.)**

சந்தாத் தொகையை மணியார்டர் மூலம் அனுப்ப:

மானேஜர் "வக்கீல்" காரியாலயம்
தபால் பெட்டி 26, கும்பகோணம்
(தென் இந்தியா)
என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.

# வக்கீல்

## பொருள் அடக்கம்

மலர் 5 — ஜூலை 1953 — இதழ் 7

அமைதி 3

கர்னூல் 3

புதிய சட்டங்கள் 4

சர்க்கார் அறிக்கைகள்

கலப்புத் தடைச் சட்ட விதிகள் திருத்தம்—
ஹோட்டல்களில் வைக்கப்படவேண்டிய

கோட்டீசு போர்டுகள் 7

லைப்ரரி கிராண்டு 7

சென்னை ஜவுளி வியாபாரிகள் சட்டுப்பாடு
விதி திருத்தம் 7

உணவு தானிய லைசென்சு கொள்முதல்
உத்தரவு திருத்தம் 8

வரிகள்

இந்திய வருமான வரி (இன்கம் டாக்ஸ்)
சட்டத் திருத்தம் 9

பெட்ரோல் விற்பனைவரி விதிகள் திருத்தம் 10

விற்பனை வரிச் சட்ட விதிகள் திருத்தம் 10

வழக்கும் - தீர்ப்பும்

* துப்பாக்கி வைத்துக்கொள்ள ஒவ்வொரு
இந்தியருக்கும் உரிமை உண்டுதான் ஆனல்? 11

* 'காமலீலை'—புத்தகம் பிரசுரம் செய்தவர்
தண்டனை அடைந்தார் 13

சென்னை கிராமப் பஞ்சாயத்து சட்டம் 15

கேள்வியும் – பதிலும் 19

கல்யாண காலங்களுக்கு
பட்டு & நூல் ஜவுளிகள்
கிடைக்குமிடம்

ருக்மணி ஸில்க்
எம்போரியம்

பெரிய தெரு, : : கும்பகோணம்

ஹெட் ஆபீஸ் :
PHONE 84188

மைலாப்பூர் ராதா ஸில்க்
எம்போரியம்
மதராஸ்.

ஆடைகளை அழகு பெறச் செய்வது
~ அன்னகிளி ~
சோப்
—தயாரிப்பவர்—
சவுத் இந்தியன் சோப் ஒர்க்ஸ்
P. B. No. 38 :: தஞ்சாவூர்

வெண்சங்கு நறுமண
குணம்
மணம்
சுத்தம்
ஆரோக்கியம்
சிக்கனம்
உடையது.
உரிமை:
S. பெத்தண்ண நாடார்
..கீழவாசல்-தஞ்சாவூர்..
சீயக்காய்த் தூள்

# வக்கீல்

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!


187724

மலர் 5 ஜூலை 1953 இதழ் 7

## அமைதி

சென்ற மகாயுத்தம் முடிந்த பிறகு, இப்போதுதான் சில நாட்களாக, தினசரிப் பத்திரிகைகள் அடுத்த யுத்த வதந்திகளை வெளியிடக் காணோம். உலகில் எங்கேயும் அமைதி நிலவுவது போன்ற ஒரு வெளித் தோற்றம் இருக்கின்றது.

'யுத்தம்' என்றால் ஒரு நாட்டிற்கும் மற்றொரு நாட்டிற்கும் நடக்கும் சண்டையைத் தான் குறிப்பிடுமென்றால் அவ்வித யுத்தம் இப்போது சத்தியாக, சமீபத்தில் வந்து விடாதென்று சொல்லலாம்.

ஆனால், வேறு வகையான யுத்தங்கள் உலகெங்கும் இரண்டு போர் முனைகளில் தீவிரமாக நடந்துகொண்டுதான் இருக்கின்றன. முதலாவது, அயல்நாட்டு ஆட்சியிலிருந்து தங்களை விடுவித்துக்கொள்ளுவதற்காக அடிமை நாடுகளில் நடக்கும் சண்டை. இதை 'யுத்தம்' என்று சொல்லமாட்டார்கள். இதற்குக் 'கலகம்' எனப் பெயர்.

இரண்டாவது, ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு தேசத்திலும், சொத்துக்களையும் வசதிகளையும் வைத்திருக்கும் வகுப்புக்கும், இவைகள் வைத்திராமல் மறுக்கப்படும் வகுப்புக்கும் நடந்துவரும் ஒரு மிகப் பெரிய சண்டை. இதை 'யுத்தம்' என்று சொல்லமாட்டார்கள். இதற்குப் 'புரட்சி' எனப் பெயர்.

இவ்விரண்டு யுத்தங்களும் முடிந்த பிறகுதான் உலகில் உண்மையான அமைதி ஏற்படும்.

## கர்னூல்

சாதாரண ஒரு மூன்றாம்தர நகரமாக இருந்த கர்னூல் பட்டணத்திற்கு சுக்கிர திசை வருகின்றது. அது ஒரு ராஜ்யத்தின் தலை நகராக மாறும். தாற்காலிகமாக இருந்தாலும், தலைநகர் தலைநகர் தானே. ராமன் வசிக்குமிடம்தான் அயோத்தி என்றால், மந்திரிகள் வசிக்குமிடந்தான் தலைநகர். அந்த அர்த்தத்தில் தான் நம்மிடமிருந்து பிரிந்துபோகும் ஆந்திரநாட்டிற்குக் கர்னூலைத் தலைநகராகச் செய்து கொள்ள ஆந்திர காங்கிரஸ் கட்சியினர் முடிவு செய்துகொண்டிருக்கின்றனர். ஏனென்றால் கர்னூலில் கவர்னர் இருக்கமாட்டார்; ஹைகோர்ட்டும் அங்கே இருக்காது. மந்திரிகள் எல்லோரும் எப்போதும் அங்கே வசிக்கமாட்டார்கள் போலவும் தோன்றுகிறது. சட்ட சபை

மட்டில் கர்னூலில் கூடிக் கலையலாம். ஆந்திர காங்கிரஸ்காரர்கள் ஏன் இவ்வளவு சௌகரியக் குறைவுகள் நிறைந்ததும், ஆந்திர ராஜ்யத்தின் ஒரு மூலையில் குன்றிக் கிடப்பதுமான கர்னூலைத் தங்களுடைய தலை நகராகச் சிபார்சு செய்தனர் தெரியுமா? தங்களுடைய கட்சி பலத்தைக் காண்பிக்கத்தான்! ஆந்திர தேசத்திற்குத் தலைநகராக இருக்கத் தேவையான சகல லட்சணங்களும் வசதிகளும் பொருந்தியதும் அந்நாட்டிற்கு இப்போதே நடு நாயகமாக விளங்குவதுமான விஜயவாடா என்ற பெஜவாடா மா நகரை, கம்யூனிஸ்டுகள் சிபார்சு செய்கின்றனர். எந்த முனையிலும் கம்யூனிஸ்டுகளைத் தோற்கடித்துச் சட்ட சபையில் அவர்கள் 'மைனாரிட்டி' தான் என்று காண்பிக்க வேண்டியது ஒன்று தானே இப்போதைய காங்கிரசின் கடமை! ஆகையால் விஜயவாடா வேண்டாமெனவும் கர்னூல் தான் வேண்டுமெனவும் 'வோட்' செய்து, ஆந்திர காங்கிரஸ் கட்சி கம்யூனிஸ்டுகளை ஜயித்து விட்டது! ஆந்திர காங்கிரசுக்கு ஜே! அகப்பட்டுக் கொள்ளாமல் பிருமாண்டமான கள்ள மார்க்கெட்டுகளையும் தியாகி நிலக் கொள்ளைகளையும் வெற்றிகரமாக நடத்திய சில காங்கிரஸ்காரர்களுக்கு ஒரு சின்ன ராஜ்யத்தை நடத்துவது ஒரு பெரிய காரியமா? இல்லவே இல்லை.


தஞ்சை சாகுபடிதார் பண்ணையாள்
பாதுகாப்புச் சட்டம்
மறுபதிப்பு வெளியாகிவிட்டது
சட்ட சபையால் இயற்றப்பட்ட புதிய சட்டம்–விதிகள்–நமூனுக்கள்–குத்தகைப் பத்திர நமூனு – வார சாகுபடிப் பத்திர நமூனு உள்பட எளிய தமிழ் நடையில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது.
விலை அணா 6
தபால் சார்ஜ் பிரத்தியேகம்.
தேவையான பிரதிகளுக்கு கீழேகண்ட விலாசத்திற்கு மணியார்டர் செய்யவும். ஏஜண்டுகள் கமிஷன் நீக்கி முன் பணம் அனுப்பவும்.
மானேஜர் — "வக்கீல்"
தமிழ் சட்டப் பத்திரிகை
தபால் பெட்டி 26, கும்பகோணம் (S. I.)


# புதிய சட்டங்கள்

## சுருக்கியும்–வரிசையாகவும்

### 1953-ஆம் வருடத்திய (மத்திய) சட்டங்கள்

[இந்திய யூனியன் பார்லிமெண்டால் நிறைவேற்றப் பட்டவை. முதலில் இருக்கும் எண், அவ்வருடத்திய எத்தனையாவது சட்டம் என்பதைக் குறிக்கும். பிராக்கெட்டுக்குள் இருப்பது ஜனாதிபதி அவர்களால் அச்சட்டத்திற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்ட தேதி. இதற்கு முன் உள்ள சட்டங்கள் "வக்கீல்" முந்திய இதழ்களில் வரிசையாகச் சொல்லப் பட்டன. வரிசையில் விட்டுப்போன சட்டங்களும், பிரசுரமானவுடன் "வக்கீல்" பிந்திய இதழ்களில் விளக்கப்படும்.]

7. பாடியாலா கிழக்கு பஞ்சால யூனியன் அரசாங்கச் செலவு அனுமதிச் சட்டம். The Patiala and East Punjab States union Appropriation Act 1953. (31-3-1953) 1952-53 வருடத்திய செலவுகளை அனுமதிக்கும் சட்டம்.

8. ௸ 1953—54 அரசாங்கச் செலவு அனுமதிச் சட்டம் (31-3-1953).

9. மத்திய அரசாங்கச் செலவு அனுமதிச் சட்டம். The Appropriation No. 2 Act 1953 (31-3-1953) 1952—53 நிதி வருடத்தில் இன்னும் ரூ. 16,42,40,000 செலவு செய்ய மத்திய அரசாங்கத்தை அனுமதிக்கும் சட்டம்.

10. ஹைதராபாத் நாணயச் சட்டம். The Hyderabad Coinage and Paper Currency Act 1953. (31-3-1953) ஹைதராபாத் ராஜ்யத்தில் ஏற்கனவே செலாவணியாக இருந்த ரூபாய்கள் இன்னும் இரண்டு வருடங்களுக்குச் செல்லுமென பிரகடனம் செய்யும் சட்டம்.

11. சென்றமாத "வக்கீல்" இதழில் விளக்கப் பட்டுள்ளது.

12. கதர் கைத்தறி தொழில் அபிவிருத்தி சுங்கவரிச் சட்டம். The Khadi and other Handloom Industries Development—Additional Excise Duty on cloth—Act 1953. (14-4-1953)

13, 14, 16 சட்டங்கள் சென்ற மாத "வக்கீல்" இதழில் விளக்கப்பட்டன.

**16.** ஜாப்தா பிரதேச சட்ட விஸ்தரிப்புச் சட்டம். Scheduled Areas—Assimilation of Laws Act 1953 (6-5-1953) அஸ்ஸாம் ராஜ்யத்திலிருக்கும் சில ஜாப்தா பிரதேசங்களில் அமுலில் இருந்த பழைய சட்டங்களை ரத்து செய்து, பக்கத்திலிருக்கும் அஸ்ஸாம் ஜில்லாவில் அமுலில் இருக்கும் சட்டங்களை அப்பிரதேசங்களிலும் அமுலுக்குக் கொண்டு வருவதற்கான சட்டம்.

**18.** இந்திய லைட்ஹவுஸ் திருத்தச் சட்டம். Indian Light house Amendment Act 1953 (16-5-1953 இச் சட்டம் பழைய சுதேச சமஸ்தானங்களாக இருந்து இப்போது இந்திய யூனியனில் 'பி' ராஜ்யங்களாக இருக்கும் பிரதேசங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. கப்பல்களுக்கு டன் ஒன்றுக்கு இரண்டணாவுக்கு அதிகப்படாமல் மத்திய சர்க்கார் கட்டணம் விதிக்கலாமென்று செக்ஷன் 10 (1)ல் இருந்தது நான்கு அணாவாக உயர்த்தப்பட்டிருக்கிறது.

**19.** சினிமா திருத்தச் சட்டம் Cinematograph Amendment Act 1953. (16-5-1953) எந்த சினிமாப்படத்தையும் இரண்டு மாதங்களுக்கு அதிகப்படாத காலத்திற்கு காண்பிக்காமல் நிறுத்தி வைக்க தணிக்கை போர்டுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக 1952ஆம் வருடத்திய சினிமாச் சட்டத்தின் செக்ஷன் 6ல் ஒரு ஷரத்து சேர்க்கப்பட்டிருக்கிறது. மேலும் புதிதாக செக்ஷன் 6A என்று ஒரு ஷரத்து சேர்க்கப்பட்டிருக்கிறது அதன்படி சினிமாப்படம் எடுத்தவர்கள் அதை வினியோகஸ்தர்களுக்கு (டிஸ்ட்ரிபூடர்களுக்கு) அல்லது கொட்டகைக் காரர்களுக்கு அனுப்பும்போது அவர்களுக்கு அப்படத்தின் பெயர், பிலிம் நீளம், சர்டிபிகேட் நம்பர், தன்மை, அதிலிருக்கும் நிபந்தனைகள் இன்னும் அவசியமான மற்ற விபரங்களையும் அறிவிக்கவேண்டும். செக்ஷன் 7 (1) மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது. இதன்படி சர்டிபிகேட் கொடுக்கப்படாத படங்களை ஒருவர் காண்பித்தாலும், 18 வயது வந்தவர்களுக்கு மட்டில் காண்பிக்கப்படவேண்டிய 'A' படத்தை அவ்வயதுக் குட்பட்டவர்களுக்குக் காண்பித்தாலும், மேலே கண்ட புதிய 6A செக்ஷன்படி ஒருவர் நடக்கத் தவறினாலும், அவருக்கு மூன்று மாதம் வரை சிறை தண்டனையோ, அல்லது ரூபாய் 1000 வரை அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படலாம் என்றும்; குற்றம் நீடித்து நடக்கும் ஒவ்வொரு தினத்திற்கும் ரூ. 1000 வரை அபராதம் விதிக்கப்படலாமென்றும் செக்ஷன் 7 (1) திருத்தப்பட்டிருக்கிறது.

**20.** பார்லிமெண்டு உத்தியோகஸ்தர்கள் சம்பளச் சட்டம். Salaries and Allowances of Officers of Parliament Act 1953 (16-5-1953.) பார்லிமெண்டின் இரண்டு சபைகளின் தலைவர் உபதலைவர் இவர்களுடைய மாதச் சம்பளங்களையும் படி முதலியவற்றையும் நிர்ணயம் செய்யும் சட்டம். மக்கள் சபை தலைவர், ராஜ்யங்களின் சபைத் தலைவர் ஒவ்வொருவருக்கும் மாதச் சம்பளம் ரூ. 2500 தவிர மாதம் ஒன்றுக்கு ரூ. 500 அலவன்ஸ் உண்டு. உபதலைவர் ஒவ்வொருவருக்கும் மாதச் சம்பளம் ரூ. 2000. இது தவிர சர்க்கார் செலவில் அவர்களுக்கு வாசஸ்தலம் அளிக்கப்படும். பிரயாண வசதிகள், வைத்திய வசதிகள் இவைகளும் உண்டு. இவை தவிர பார்லிமெண்டு அங்கத்தினர் என்ற ஹோதாவில் அவர்களுக்கு சம்பளமோ படியோ கிடையாது.

**21.** தணிக்கை உயர் அதிகாரி உத்தியோக நிபந்தனைச் சட்டம். Auditor General (Conditions of Service) Act 1953 (17-5-1953) சர்க்கார் கணக்குகளை தணிக்கை செய்வதற்கான இலாகாவின் தலைமை அதிகாரியாகிய 'ஆடிடர் ஜெனரல்' என்ற உயர் அதிகாரி நியமிக்கப்படும் தேதியிலிருந்து 6 வருடங்கள் அப்பதவி வகிக்கலாம் என்று நிர்ணயம் செய்யும் சட்டம். இப்போது ஆடிடர் ஜெனரலாக இருப்பவர் 15-8-1948ல் நியமிக்கப்பட்டதாக கணக்கு செய்யப்படும். இவ்வதிகாரிகளுடைய பென்ஷன் தொகையும் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது.

**23.** இந்திய வியாபாரக் கப்பல் சட்டத் திருத்தம். Indian Merchant Shipping Amendment Act (21-5-1953.) கடல் மார்க்கம் செல்லுபவர்களின் பாதுகாப்புக்காக கப்பல்கள் என்ன என்ன பாதுகாப்புகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற சர்வதேச உடன்படிக்கைக்கு ஏற்க இந்திய வியாபாரக் கப்பல் சட்டத்தில் அப்பாதுகாப்புகளைப் பற்றி ஷரத்துக்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

**25.** இந்திய வருமானவரித் திருத்தச் சட்டம் Indian Income Tax Amenument Act 1953. (24-5-1953) முக்கிய ஷரத்துக்கள் அடங்கிய இப்புதுச் சட்டம் 'வரிகள்' என்ற பகுதியில் விளக்கப்பட்டிருக்கிறது.

**26.** கைத்தொழில் அபிவிருத்தி ஒழுங்குச் சட்டத் திருத்தம். Industries Development and Regulation Amendment Act 1953. இச் சட்டத்தில் கைத் தொழில் அபிவிருத்தி சம்பந்தமாகப் பல புதிய ஷரத்துக்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவை பிரத்யேகமாக விளக்கப்படும்.

27. ஆகாய விமானக் கார்பொரேஷன் சட்டம். Air Corporations Act 1953. (28-5-1953) இந்தியாவுக்குள்ளும், இந்தியாவுக்கும் வெளிநாடுகளுக்கும் ஆகாய மூலம் போக்கு வரத்துகள் நடத்த இரண்டு ஸ்தாபனங்கள் ஏற்படுத்தவும் இப்போதிருக்கும் ஆகாய விமானக் கம்பெனிகளை அந்த ஸ்தாபனங்களே எடுத்துக்கொண்டு ஆகாய விமானப் போக்கு வரத்தை ஒழுங்கு செய்வதற்கான சட்டம்.

28. விந்திய பிரதேச சட்ட சபை—யோக்கியதாபச் குறைவு நிவர்த்திச் சட்டம். Vindya Pradesh Legislative Assembly—Prevention of Disqualification Act 1953. (28-5-1953) விந்தியப் பிரதேசத்தில் ஜில்லா ஆலோசனை கவுன்சில் மெம்பர்கள் சட்ட சபையிலும் மெம்பர்களாக இருக்கலாமென்று அனுமதிக்கும் சட்டம்.

29. தேயிலைச் சட்டம். Tea Act 1953. (28-5-1953.) இந்தியாவில் தேயிலை பயிர் செய்வது, ஏற்றுமதி செய்வது முதலியவற்றை ஒழுங்கு படுத்தவும் தேயிலை, போடு ஏற்படுத்தவும், தேயிலைக்கு கஸ்டம்ஸ் வரி விதிப்பதற்குமான சட்டம்.

## 1953 ஆம் வருடத்திய (சென்னை) சட்டங்கள்

[சென்னைச் சட்ட மன்றத்தால் நிறைவேறப்பட்டவை. சட்டம் சென்னை சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்ட தேதி பிராக்கெட்டில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முன் உள்ள சட்டங்கள் "வக்கீல்" முந்திய இதழ்களில் வரிசையாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.]

7. இந்தியாவை விட்டு வெளியேறியவர்களின் பாத்திய பிரிவினை சென்னைச் சட்டம். The Evacuee Interest—Separation Madras Supplementary Act 1953. இது விஷயமாக பத்திய பார்லிமெண்டால் செய்யப்பட்டிருக்கும் 1951 ஆம் வருடத்திய 64-ஆவது சட்டமானது சென்னை ராஜ்ய சட்ட சபையால் சட்டம் செய்யவேண்டிய சொத்துக்களுக்கும் பொருந்துமென்ற சட்டம்.

8. மாகாண இன்ஸால்வென்ஸி சட்டத் திருத்தம். Provincial Insolvency—Madras Amendment—Act 1953. (27-5-1953.) இன்ஸால்வென்ஸி சட்டத்தில் 1948-ல் செக்ஷன் 28-A என்று ஒரு புதிய ஷரத்து சேர்க்கப்பட்டது. அதாவது கடன் கொடுக்க சக்தியற்றவர் அல்லது 'இன்ஸால்வெண்ட்' என்று கோர்ட்டால் தீர்மானிக்கப்பட்ட வருடைய சொத்துக்கள் அபிஷியல் ரிசீவருடைய நிர்வாகத்தில் ஒப்படைக்கப்படும். 'சொத்துக்கள்' என்றால் என்ன என்று சந்தேகம் வந்தது. உதாரணமாக இந்து பிரிபடாத குடும்பத்தில் தகப்பனும் இரண்டு மகன்களும் இருந்தால், தகப்பனுக்குக் குடும்ப சொத்தில் மூன்றில் ஒரு பாகம் தான் உண்டு. ஆனால் தகப்பன் அல்லது குடும்பத் தலைவர் என்ற முறையில் அவர் தம்முடைய சொந்தக் கடனைக் கொடுப்பதற்காகவும் சரி, குடும்ப அவசியமான கடன்களைக் கொடுப்பதற்காகவும் சரி, தன்னுடைய பாகம் மட்டுமல்ல, தன் மகன்களுடைய பாகங்களையும், அதாவது பூரா சொத்தையும் விற்று விட அவருக்கு இந்தச் சட்டத்தால் ஒரு உரிமை இருக்கிறது. அவ்வித இந்துத் தகப்பன் ஒருவர் 'இன்ஸால்வெண்ட்' என்று தீர்மானிக்கப்பட்டால், குடும்ப சொத்தில் அவருடைய பாகம் மட்டில் அபிஷியல் ரிசீவரிடம் போகுமா, அல்லது பூரா சொத்தையும் விற்கக் கூடிய அவருக்கிருக்கும் உரிமையும் அபிஷியல் ரிசீவரிடம் போகுமா என்ற சந்தேகம் எழுந்தபடியால் இன்சால்வென்சி சட்டத்தில் செக்ஷன் 28A என்ற ஷரத்து சேர்க்கப்பட்டது. இதன்படி மகன்களுடைய பாகத்தையும் சேர்த்து விற்கக் கூடிய தகப்பனுடைய உரிமையும் 'சொத்தாக' பாவிக்கப் பட்டு அவ்வதிகாரமும் அபிஷியல் ரிசீவரிடம் போய் விடும். இப்போது இன்சால்வென்சி சட்டத்தை சென்னை ராஜ்ய சட்ட சபையே திருத்தி விடலாம். அந்த அதிகாரத்தை உபயோகித்து இச்சென்னை திருத்தச் சட்டம் இயற்றப் பட்டிருக்கிறது. அதாவது செக்ஷன் 28B என்று ஒரு புதிய ஷரத்து சேர்க்கப்பட்டிருக்கிறது. இதன் படி செக்ஷன் 28A ஷரத்தானது 1-4-1949 முதல் இப்போது சென்னை ராஜ்யத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் புதுக்கோட்டை பிரதேசத்திற்கும் பொருந்துமென பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் புதுக்கோட்டை சம்பந்தப்பட்டமட்டில் 7-5-1947க்கு முன் கோர்ட் அல்லது ரிசீவரால் ஏற்பட்டு பிறகு கோர்ட்டால் முடிவாகத் தீர்மானிக்கப்பட்ட விற்பனை அடமானம் அல்லது வேறு பராதீனங்களுக்கு இந்த ஷரத்து பொருந்தாது. மேலும் 29-8-1944க்குப் பின் 7-5-1947க்கு முன் ஏற்பட்டிருக்கும் விற்பனை அடமானம் முதலிய பராதீனங்களுக்கும் இந்த ஷரத்து கிடையாது.




# சர்க்கார் அறிக்கைகள்

## கலப்புத் தடைச் சட்ட விதித் திருத்தம். ஹோட்டல்களில் வைக்கப்பட வேண்டிய நோட்டீசு போர்டுகள்

சென்னை கலப்புத் தடைச் சட்ட விதிகளில் (Madras Prevention of Adulteration Rules 1932) விதி 28 B (1) என்பது கீழே கண்டபடி திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது. அதாவது, எந்த ஹோட்டல், கடை அல்லது ஸ்டால்களில் தித்திப்பு அல்லது உப்பு அல்லது வேறு தின் பண்டங்கள் விற்பனை செய்யப் பட்டால் ஹோட்டல் அல்லது கடையில் நுழையும் இடத்திலேயும், ஸ்டால்களில் வெளிப் புறத்திலேயும் ஒன்று அல்லது அதிகமான நோட்டீஸ் போர்டுகள் வைக்கப்பட்டிருக்க வேண்டும். நோட்டீஸ் போர்டில் எந்த எந்த தித்திப்பு பட்சணங்கள், அல்லது உப்பு பட்சணங் கள் அல்லது வேறு தின்பண்டங்கள் நெய்யில் செய்யப்பட்டவை என்று குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

(17-6-1953 சென்னை சர்க்கார் கெஜட்—பாகம் IA-ரூல் சப்ளிமெண்ட்—91.)

## கிராம சங்கங்களால் ஏற்படுத்தப்படும் நூல் நிலையங்கள் 'கிராண்டு' வேண்டுமானால் ரூ. 3000 மூல தனம் வேண்டும்

1950ஆம் வருடத்திய சென்னைப் பொது நூல் நிலைய (லைப்ரரிச்) சட்ட விதி 18 என்பது கீழே கண்டபடி திருத்தி அமைக்கப்பட்டிருக் கிறது. சென்னைப் பொது லைப்ரரிச் சட்டப்படி நியமிக்கப்படும் லைப்ரரி டைரெக்டரிடமிருந்து சகாயத்தொகை (கிராண்டு) அடைந்து வர லாயக் காக இருக்க வேண்டுமானால் நூல் நிலையங்கள் (லைப்ரரிகள்) எவ்விதமிருக்கவேண்டுமென்று நிபந்தனைகள் இருக்கின்றன. விதி 18 (9)ல் கண்ட நிபந்தனை பின் வருமாறு மாற்றப்பட்டிருக்கிறது. அதாவது:—பட்டணங்களிலோ அல்லது ஜனத்தொகை 5000க்கு மேற்பட்ட கிராமங்களிலோ கிராம சங்கங்களோ, அல்லது வேறு சொந்தக்காரர்களோ ஒரு நூல் நிலையம் ஏற்படுத்திக் கொண்டால், அதற்கு ரூ. 3000 மூல தனமும், அதிலிருந்தும் வேறு வகைகளி லிருந்தும் அதற்கு வருட வருமானம் குறைந்தது ரூ. 200ம் இருந்தால் தான் அந்த லைப்ரரியானது டைரெக்டரிடமிருந்து கிராண்டு (பண உதவி) பெற்றுக்கொள்ள லாயக்காக இருக்கும். சர்க்கார் கிராண்டு தவிர மேற்கண்ட ரூ. 200 வர வேண்டும். ஆனால் கிராம பஞ்சாயததாலோ, கூட்டுறவு சங்கத்தாலோ நடத்தப்படும் லைப்ரரி களுக்கு இவ்விதி கிடையாது. மேலும் மேற் கண்ட மூல தன மில்லாமல் இப்போதிருக்கும் லைப்ரரிகள் 1-4-1953 தேதியிலிருந்து 5 வருடங்களுக்குள் அம் மூல தனத்தை ஏற் படுத்திக்கொள்ளலாம்.

(3-6-1953—சென்னை சர்க்கார் கெஜட்—பாகம் IB ரூல் சப்ளிமெண்ட்—25.)

## சென்னை ஜவுளி வியாபாரிகள் கட்டுப்பாடு விதி திருத்தம்

சென்னை ஜவுளி வியாபாரிகள் கட்டுப்பாடு விதி 14 (1) (b) ஷரத்தில் கீழே கண்டபடி ஒரு குறிப்பு சேர்க்கப்பட்டிருக்கிறது. அதா வது மத்திய சர்க்காரால் அவ்வப்பொழுது

விலைக்கட்டுப் பாடும் விநியோகக் கட்டுப்பாடும் ரத்து செய்யப்படும் ரகங்களையும் சரி, விலைக் கட்டுப்பாடு மட்டில் இருந்து ஆனால் தாராளமாக விற்கக் கூடிய ரகங்களையும் சரி, எந்த மொத்த வியாபாரியும் அல்லது சில்லறை வியாபாரியும் நேரடியாக வேறு லைசென்சு பெற்ற வியாபாரிக்கும் விற்கலாம், வாடிக்கைக்காரர்களுக்கும் விற்கலாம் என்று சேர்க்கப்பட்டிருக்கிறது.

(3—6—1953 சென்னை சர்க்கார் கெஜட்—பாகம் II ரூல் சப்ளிமெண்டு—71)

## உணவு தானிய லைசென்சு—கொள் முதல் உத்தரவு திருத்தம்

உணவு தானிய லைசென்சு கொள் முதல் உத்தரவில் (Food Grains Licensing and Procurement order 1952) ஷரத்து 3 (3) என்று ஒரு புதிய ஷரத்து சேர்க்கப்பட்டிருக்கிறது. லைசென்சு வாங்க வேண்டியதில்லை என்று விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கும் வியாபாரிகளுக்கும் தனி நபர்களுக்கும் 'விதி விலக்கு அத்தாட்சி'—(Exemption Certificate) என்று ஒன்று கொடுக்கப்பட வேண்டும். இது எந்த நமூனைப்படி இருக்க வேண்டுமென்று ராஜ்ய சர்க்காரால் விதி ஏற்படும். விதிவிலக்கு சர்டிபிகேட்டுக்கும் ஒரு கட்டணம் விதிக்கப்படலாம் என்று திருத்தப்பட்டிருக்கிறது.

(3—6—1953—சென்னை சர்க்கார் கெஜட்—பாகம் II ரூல் சப்ளிமெண்டு—75)


கல்யாண
பட்டுநூல்
ஜவுளிகளுக்கு

★

ராதா ஸில்க்
எம்போரியம்

★

119, பெரிய தெரு, :: கும்பகோணம்.



சரக்கு விற்பனைச் சட்டம்
(The Indian Sale of Goods Act)

எளிய தமிழ் நடையில் "வக்கீல்" பிரசுரம் 6 என்று பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. வியாபாரிகளுக்கு மிக அவசியமானது.

விலை ரூ. 1-8-0

தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

மானேஜர்—"வக்கீல்"
தமிழ் சட்டப் பத்திரிகை
கும்பகோணம் (S.I.)



எங்கும் புகழ் பெற்ற அற்புத சஞ்சீவி

"ஜெயராம்" காயசுத்தி லேகியம் (Regd. No. 138512)



இரண்டே வேளையில் ஆச்சரியமான குணம் தெரியும்.
ஆயிரக்கணக்கான மக்களால் தினமும் உபயோகிக்கப்படுவது.

தலைவலி, மயக்கம், வாந்தி, கழுத்துப் பிடரிவலி, நெஞ்சுவலி, முதுகுவலி, புளித்தேப்பம், நெஞ்செரிச்சல், அஜீரணம், வயற்றுப்பிசம், வயற்றுவலி, இடுப்புவலி, கைகால் வலி, கிருமிகளின் உபாதை, நாள்பட்ட மலச்சிக்கல், இருமல், நெரிக்கட்டிய சுரம், மூலநோய் முதலியவைகளை நீக்கி பசியைக் கொடுத்து உடலுக்குப் புதிய சக்தியை அளிக்கும்

உபயோகிக்கும் விபரம் மருந்துடன் வரும்

1 சேர் ரூ. 4-8-0 ½ சேர் ரூ. 2-4-0

வி. பி. பி. செலவு தனி

உங்கள் வியாதி எதுவாயினும் ஜெயராம் வைத்தியசாலைக்கு வாருங்கள்

தயாரிக்குமிடம் :— ஜெயராம் வைத்தியசாலை, 28, காசிவிஸ்வநாதர் கீழவீதி, கும்பகோணம்

# இந்திய வருமானவரி (இன்கம்டாக்ஸ்) சட்டத் திருத்தம்

## வரிகள்

சமீபத்தில் இந்திய யூனியன் பார்லிமெண்டால் இயற்றப்பட்ட 1953—ஆம் வருடத்திய 25 ஆவது மத்திய சட்டத்தால் 1922 ஆம் வருடத்திய 'இன்கம்டாக்ஸ்' சட்டத்தில் பல ஷரத்துகள் திருத்தி அமைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் முக்கியமான திருத்தங்களாவன:—'வரி விதிக்கப்படுபவர்' (Assessee) என்ற வார்த்தைக்குப் புதிதாக அர்த்தம் கொடுக்கப் பட்டிருக்கிறது. அதாவது. இச்சட்டப்படி யாரிடமிருந்து வருமானவரியோ, வேறு தொகைகளோ கொடுக்கப்பட வேண்டியிருக்கிறதோ அவர்களும், யாருடைய வருமானத்தையோ, நஷ்டத்தையோ, அவர் வாபஸ் பெற வேண்டிய தொகையையோ நிர்ணயம் செய்வதற்காக இச்சட்டப்படி நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறதோ அவர்களும் இச்சட்டத்தில் 'வரி விதிக்கப்படுபவர்' என்று சொல்லுவதில் அடங்கியவராவார்கள். டைரெக்டர் ஆப் இன்ஸ்பெக்ஷன் (Director of Inspection), இன்கம்டாக்ஸ் இன்ஸ்பெக்டர் (Inspector of Income Tax) என்ற இரண்டு வகை அதிகாரிகளும், சட்ட பூர்வமாக நியமிக்கப்பட வேண்டிய இன்கம்டாக்ஸ் அதிகாரிகளின் ஜாப்தாவில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர். அதாவது இப்போது மேலிருந்து படிப்படியாக அடியில் கண்ட வருமான வரி அதிகாரிகள் இருப்பார்கள். அவர்களாவன:—(1) மத்திய ரிவின்யூ போர்டு (Central Board of Revenue) (2) டைரக்டர் ஆப் இன்ஸ்பெக்ஷன் (3) இன்கம்டாக்ஸ் கமிஷனர் (4) உதவி இன்கம்டாக்ஸ் கமிஷனர்கள். இவர்களில் இரண்டு வகைகள் உண்டு. அப்பீல் உதவி கமிஷனர்; இன்ஸ்பெக்டிங் உதவி கமிஷனர். (5) இன்கம்டாக்ஸ் ஆபீசர்கள் (6) இன்கம்டாக்ஸ் இன்ஸ்பெக்டர்கள். இவர்களில் டைரெக்டர் ஆப் இன்ஸ்பெக்ஷன் என்ற அதிகாரியோ, கமிஷனரோ அல்லது இன்ஸ்பெக்டிங் உதவி கமிஷனர் என்ற அதிகாரியோ, நிர்வாக தோரணையில் தங்களுக்குட் பட்டிருக்கும் இன்கம்டாக்ஸ் ஆபீசர்களுக்கு வரிவிதிப்பு விஷயமாக யுக்தமான உத்தரவுகள் பிறப்பிக்கலாம் என்று ஒரு ஷரத்து சேர்க்கப்பட்டிருக்கிறது. அதாவது குறிப்பிட்ட ஒரு நபர் விஷயமாக இன்கம்டாக்ஸ் ஆபீசர் எவ்விதம் விசாரணை செய்ய வேண்டுமென்றோ, எப்படி அவருக்கு வரி விதிக்க வேண்டுமென்றோ ரகசியமான, அதாவது வரி விதிக்கப்படும் நபருக்குத் தெரியாத, உத்தரவுகளைப் பிறப்பிக்க மேற்கண்ட மூன்று உயர் அதிகாரிகளுக்கும் இப்போது சட்டபூர்வமான அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

மற்றொரு முக்கிய திருத்தமாவது:—செக்ஷன் 37 (2) என்று ஒரு புதிய ஷரத்து சேர்க்கப்பட்டிருக்கிறது. இதன்படி வருமானவரி அதிகாரிகள் முன் தாகல் செய்யப்படும் கணக்குப் புத்தகங்களையும் மற்ற தஸ்தவேஜுகளையும் அவர்கள் திருப்பிக் கொடுக்காமல் தங்களுக்கு யுக்தமாகத் தோன்றும் காலம் வரையில் அவற்றைத் தங்களிடமே வைத்துக் கொள்ள அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவ்விதம் செய்வதற்கான காரணங்களை அவ்வதிகாரிகள் எழுதி வைத்துக்கொள்ள வேண்டும். மேலும் விடுமுறை நாட்களை நீக்கி பதினைந்து நாட்களுக்கு மேல் கணக்குகளையும் தஸ்தவேஜுகளையும் திருப்பிக் கொடுக்காமல் வைத்துக் கொள்ள இன்கம்டாக்ஸ் கமிஷனருடைய அங்கீகாரம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இத்திருத்தச் சட்டத்தால் வரி விதிக்கப் படுபவருக்கும் பல சலுகைகள் காண்பிக்கப் பட்டிருக்கின்றன. அவைகளில் முக்கியமானவை:—(1) அயல் நாட்டிலிருந்து வந்த ஒருவர் இந்திய வாசியாகவே போய் விட்டால், முதல் இரண்டு வருடங்களில் அவர் அயல் நாட்டிலிருந்து இந்தியாவுக்குக் கொண்டு வரும் வருமானத்திற்கு வரி கிடையாது. (2) இந்திய வாசிக்கு அயல்

நாடுகளில் கிடைக்கும் வருமானமானது, இந்தியாவுக்கு அனுப்பப் படாவிட்டால் அதற்கு, சில நிபந்தனைகளுக்குட்பட்டு, வரி கிடையாது. (3) புதிய கட்டட வருமானங்களுக்கு இன்னும் இரண்டு வருடங்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. (4) அயல் நாட்டில் இதே வருமானத்தின் பேரில் வருமான வரி விதிக்கப்பட்டவர்களுக்கு, சலுகை காண்பிக்கப்பட்டிருக்கிறது. வேறு பல திருத்தங்களும் செய்யப் பட்டிருக்கின்றன.

## பெட்ரோல் விற்பனை வரி விதிகள் திருத்தம்.

1939-ஆம் வருடத்திய சென்னை மோட்டார் ஸ்பிரிட் விற்பனை வரி விதி 26 திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது. இப்புது விதியின்படி, எக்காரணத்தைக் கொண்டாவது ஒரு வியாபாரி செய்யும் வியாபாரத்திற்கு ஒரு வருடத்தில் வரி விதிக்கத் தவறிப் போய் விட்டால், அவ்வருடத்திற்குப் பின் வரும் மூன்று வருடங்களுள் அப்படி விட்டுப் போன வியாபாரத்தைப் பொருத்தும் வரி விதிக்க கமர்ஷியல் டாக்ஸ் ஆபீசருக்கு அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆனால் வியாபாரிக்கு இது விஷயமாக நோட்டீசு கொடுத்து தேவையான விசாரணை செய்த பிறகு தான் அவ்விதம் வரிவிதிக்க முடியும். அதைப் போலவே எந்த வருடத்திலாவது ஒரு வியாபாரிக்குக் குறைந்த விகிதப்படி வரி விதிக்கப்பட்டிருந்தாலும் அதையும் மேற்கண்டபடி மூன்று வருடங்களுக்குள் திருத்தி சரியான வரி விதிக்கலாம். அப்படி தவறுதலாக ரீபண்டு செய்யப்பட்ட தொகைகளையும் மூன்று வருடங்களுக்குள் திரும்பக் கட்ட வேண்டுமென்று வியாபாரிக்கு உத்தரவிட கமர்ஷியல் டாக்ஸ் ஆபீசருக்கு அதிகாரம் உண்டு. ரீபண்டு கேட்கும் மனு தொகை செலுத்தப் பட்ட மூன்று மாதங்களுக்குள் போடப்பட வேண்டுமென்று இருந்த விதி 27ல், மூன்று வருடங்களுக்குள் மனுப் போடலாமென்று இப்போது திருத்தப்பட்டிருக்கிறது. வியாபாரிகள் குறைந்தது 12 மாதங்கள் தங்களுடைய கணக்குகளை வைத்துக் கொண்டிருக்க வேண்டுமென்று இருந்த விதி 28-ம் திருத்தப் பட்டுள்ளது. இனி கணக்குகள் மூன்று வருடங்கள் வரை ஜாக்கிரதையாக வைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(G. O. 1634—24—6—1953 தேதி சென்னை சர்க்கார் கெஜட்—பாகம் I ரூல் சப்ளிமெண்ட்—பக்கம் 239.)

## விற்பனை வரிச்சட்ட விதிகள் திருத்தம்.

வியாபாரிகள் மூன்று வருடம் வரை கணக்குகளையும் வவுச்சர்களையும் வைத்துக் கொள்ள வேண்டும்:—விற்பனை வரி விதி 11-ல் வியாபாரிகள் தங்களுடைய கணக்குகளையும் வவுச்சர்களையும் இரண்டு வருடம் வரை வைத்திருக்க வேண்டுமென்று இருந்தது; இப்போது இவ்விதி திருத்தப் பட்டிருக்கிறது. இத்திருத்த விதியின்படி வியாபாரிகள் தங்களுடைய கணக்குகளையும் ஸ்டாக், கொள்முதல், விற்பனை முதலியவை பற்றிய வவுச்சர்களையும் அந்தந்த வருடம் முடிந்த பிறகு மூன்று வருடங்கள் வைத்துக் கொண்டிருக்க வேண்டும். விதி 17-ம் திருத்தப் பட்டிருக்கிறது. வரி விதிக்க விட்டுப்போன விற்பனைகளுக்கு அவ்வருடம் முடிந்த மூன்று வருடங்களுக்குள் வரி விதிக்க விற்பனை வரி அதிகாரிகளுக்கு அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது. இதற்கு முன் இரண்டு வருடங்களுக்குள் தான் விட்டுப்போன விற்பனைகளுக்கு வரி விதிக்கலாமென்று இருந்தது. குறைந்த வரி விதிக்கப்பட்டவர்களுக்கும் மூன்று வருடங்களுக்குள் சரியான வரி விதிக்கலாம். வரி விதிக்கும் அதிகாரியும் சரி, அப்பீல் அல்லது ரிவிஷன் அதிகாரிகளும் சரி தாங்கள் செய்த உத்தரவுகளில் வெளிப்படையாகத் தோன்றும் தவறுகளை உத்தரவுத் தேதியிலிருந்து மூன்று வருடங்களுக்குள் திருத்திக் கொள்ளலாம் என்று விதி 18 (1) திருத்தப்பட்டிருக்கிறது. முன்பு இரண்டு வருடங்களுக்குள்தான் அவ்விதம் திருத்தலாமென்று இருந்தது.

## 'கிராஸ் செக்' தான் அனுப்ப வேண்டும்.

விற்பனை வரி விதி 6 (4) (d) ன்படி லைசென்சுத் தொகைகளை ஒரு வியாபாரி செக் மூலம் அனுப்பலாமென்று இருந்தது. அப்படியானால் 'கிராஸ் செக்' மூலம் தான் அனுப்பலாம் என்று இப்போது திருத்தப் பட்டிருக்கிறது.

(14-ஆம் பக்கம் தொடர்ச்சி)

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
187724
சென்னை-600 008



# வழக்கும் தீர்ப்பும்

இப்பகுதியில் நமது சுப்ரீம் கோர்ட், ஹைகோர்ட்டுகள் முதலிய உயர் நீதி மன்றங்களின் நீதிபதிகளால் அளிக்கப்படும் தீர்ப்புகளின் முக்கிய அம்சங்களை ஒட்டி சட்ட விளக்கம் செய்யப்படும். சட்ட தத்துவங்களை விளக்கும் அன்னிய நாட்டு உயர் நீதிபதிகளின் அபிப்பிராயங்களையும் நேயர்கள் இங்கே வாசிக்கலாம்.

## துப்பாக்கி வைத்துக்கொள்ள ஒவ்வொரு இந்தியருக்கும் உரிமை உண்டு தான்—ஆனல்?

[ஆதாரம்:—1953 ஆல் இந்தியா ரிபோர்ட்டர்—மதராஸ் ஹைகோர்ட்—476. உயர் நீதிபதி சுப்பராவ் அவர்களின் தீர்ப்பு.]

நரசிம்ம ரெட்டி ஒரு இந்தியப் பிரஜை. கடப்பை ஜில்லா வாசி. ஒரு குக்கிராமத்தில் வசிப்பவர். அவ்வூரில் அவருக்கு சில புலன்கள் உண்டு. ஊருக்கு இரண்டு பக்கங்களிலும் காடுகள். புலி, கரடி, காட்டுப்பன்றி, மான் முதலிய காட்டு மிருகங்கள் சஞ்சரிக்கும் காடுகள். இம் மிருகங்களால் பயிர்களுக்கும் சரி, கால் நடைகளுக்கும் சரி சேதம் ஏற்பட்டுக் கொண்டே இருந்தன. இக்காட்டு மிருகங்களிடமிருந்து தம்முடைய பயிர்களைப் பாதுகாப்பதற்காகத் தாம் ஒரு துப்பாக்கி வைத்துக் கொள்ள வேண்டுமென்று அனுமதி (லைசென்சு) கோரி நரசிம்ம ரெட்டி, கடப்பை ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டுக்கு மனுப் போட்டார். அம்மனுவை ஜில்லா மாஜிஸ்ட்ரேட் நிராகரித்து விட்டார். அவருடைய உத்தரவு இது தான்—"இம்மனுவில் கேட்கப்படும் துப்பாக்கி லைசென்சு கொடுக்கப்படமாட்டாது"—என்று மட்டில் தான் உத்தரவில் இருந்தது. ஏன் நரசிம்ம ரெட்டிக்குத் துப்பாக்கி லைசென்சு கொடுக்கக் கூடாதென்று யாதொரு காரணமும் அவ்வுத்தரவில் காணப்படவில்லை.

இவ்வுத்தரவு செல்லா தென்றும் அதை ரத்து செய்வதுடன் தமக்குத் துப்பாக்கி லைசென்சு கொடுக்கும்படி கடப்பை ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டுக்கு ஒரு உத்தரவு (Writ of Mandamus) பிறப்பிக்க வேண்டுமென்றும் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 226-ஆவது ஷரத்தின்படி நரசிம்ம ரெட்டியானவர் சென்னை ஹைகோர்ட்டுக்கு இரண்டு 'ரிட்' மனுக்கள் கொடுத்தார்.

அம்மனுவை விசாரித்த உயர் நீதிபதி அவர்கள் இது சம்பந்தமான சட்ட நுட்பங்களை ஆராய்ச்சி செய்து ஜில்லா மாஜிஸ்ட்ரேட் செய்த உத்தரவை ரத்து செய்து, நரசிம்ம ரெட்டியால் கொடுக்கப்பட்ட லைசென்சு மனுவை சட்டப்படி முடிவு செய்ய வேண்டுமென ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டுக்கு கட்டளை பிறப்பித்தனர். இது சம்பந்தமான சட்டம் என்ன?

ஆயுதச் சட்டத்தின் (Arms Act 1878) செக்ஷன் 5:—லைசென்சு இல்லாமலும்,

லைசென்சில் கண்ட நிபந்தனைகளுக்கு முரணாக யும் எவரும் எவ்வித ஆயுதங்களையும், ஆயுத மருந்துகளையும், சேனைக்குரிய சாமான்களையும் உற்பத்தி செய்யவும், மாற்றவும், விற்கவும், வைத்திருக்கவும், விற்பனை கூறவும் கூடாது.

செக்ஷன் 17: லைசென்சு சம்பந்தமான விதிகள் செய்யும் அதிகாரம்:—எந்த அதிகாரிகளால் லைசென்சு கொடுக்கப்பட வேண்டும்; எப்படி லைசென்சுக்கு மனுப்போடுவது, எந்த எந்த நிபந்தனைகளுக்குட் பட்டு லைசென்சு கொடுக்கப்பட வேண்டும் என்ற விஷயங்களைப்பற்றி அவ்வப்பொழுது கெஜட் விளம்பரத்தின் மூலம் விதிகள் ஏற்படுத்த மத்திய சர்க்காருக்கு அதிகாரமுண்டு. செக்ஷன் 19:—எவர் ஒருவர் செக்ஷன் 5-ன் ஷரத்துக்களுக்கு முரணாக ஆயுதங்கள் முதலியவற்றை உற்பத்தி செய்தாலும், விற்றாலும், வைத்துக் கொண்டிருந்தாலும் ...அவருக்கு மூன்று வருடம் வரை சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம்.

விதி 43: லைசென்சு கொடுக்கும் அதிகாரிகளின் அதிகாரங்கள்:—லைசென்சு கொடுப்பதற்கோ, லைசென்சைப் புதுப்பிப்பதற்கோ அல்லது அதற்கு முன் அனுமதி கொடுப்பதற்கோ, அதிகாரமுள்ள அதிகாரிக்கு யுக்தமாகத் தோன்றினால் அவர் லைசென்சு கொடுக்கவோ, புதுப்பிக்கவோ, முன் அனுமதி கொடுக்கவோ, மறுக்கவோ அதிகாரமுள்ளவர். மேலும் அவ்வதிகாரியானவர் ராஜ்ய சர்க்காருக்கு உட்பட்டவராக இருந்தால், மனுவை அச்சர்க்காருக்கே அனுப்பிவிடலாம். ஆனால் லைசென்சு கொடுக்கவோ புதுப்பிக்கவோ மறுக்கும் அதிகாரியின் உத்தரவின் பேரில் அவருக்கு அடுத்தபடியான மேல் அதிகாரிக்கு அப்பீல் செய்யலாம். (சென்னை ராஜ்யத்தில் ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டுக்கு அடுத்த மேல் அதிகாரி ரிவின்யூ போர்டு தான்.) லைசென்சு கொடுப்பதற்கும் புதுப்பிப்பதற்கும் அதிகாரமுள்ள அதிகாரிகள் அவ்வதிகாரத்தை அவர்களுக்கு மேற்பட்ட அதிகாரிகளின் மேற்பார்வைக்குட்பட்டு செலுத்த வேண்டும் என்று விதிகளில் இருக்கிறது. விதிகளின் கடைசியில் லைசென்சுக்கு மனுப்போட வேண்டிய நமூனாவும் லைசென்சு நமூனாவும் இருக்கின்றன. மேற்கண்ட ஆயுதச் சட்ட ஷரத்துக்கள் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் கண்ட மக்களின் ஜீவாதார உரிமைக்கு முரணாக இருப்பதால், அவை செல்லாதென ஹைகோர்ட்டில் நரசிம்ம ரெட்டிக்காக வாதாடப் பட்டது. இந்த ஜீவாதார உரிமை என்னவென்றால்—"இந்தியப் பிரஜைகள் யாவருக்கும்...சொத்துக்களைச் சம்பாதிக்கவும் வைத்திருக்கவும் விநியோகப் படுத்தவும்... உரிமை உண்டு"—என்று அரசியல் அமைப்புச் சட்டத்தின் ஆர்டிகள் 19 (1) (f) என்ற ஷரத்தில் கண்டிருக்கிறது. துப்பாக்கி என்பது ஒரு வகை சொத்துதான். ஆகையால் எவரும் அச்சொத்தைத் தம் இஷ்டம் போல் வாங்கி வைத்துக் கொள்ளலாம்; அதைத் தடுக்கும் ஆயுதச் சட்ட ஷரத்துக்கள் செல்லமாட்டா. ஏனென்றால் ஜீவாதார உரிமைகளுக்கு முரணாக இருக்கும் பழைய சட்டங்களும் சரி, புதிய சட்டங்களும் சரி செல்லமாட்டா என்று நமது அரசியல் அமைப்புச்சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது—என்று துப்பாக்கி லைசென்சு கேட்டவருக்காக ஹைகோர்ட்டில் வாதாடப்பட்டது. இதை உயர் நீதிபதி அவர்கள் ஒப்புக்கொண்டனர். அதாவது துப்பாக்கியும் ஒரு வகை சொத்து தான் என்பதையும், சொத்துக்களைப் பற்றிய மேற்கண்ட ஷரத்துக்கள் துப்பாக்கி வாங்கி வைத்திருப்பதற்கும் பொருந்தும் என்பதையும் நீதிபதி அவர்கள் ஏற்றுக்கொண்டனர். ஆனால் அரசியல் அமைப்புச் சட்டத்தின் ஆர்டிகள் 19 (5) ல் ஒரு நிபந்தனை கண்டிருப்பதை நீதிபதி அவர்கள் எடுத்துக் காண்பித்தனர். அதாவது—சொத்துக்கள் சம்பந்தமான மேற்கண்ட பக்கலின் ஜீவாதார உரிமைகளைச் செலுத்துவதில், பொது மக்களின் நன்மைக்காகத் தேவையான நியாயமான நிபந்தனைகளை ஏற்படுத்தும் சட்டதிட்டங்கள் எல்லாம் செல்லும்—என்றும் அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதாவது சொத்து விஷயமாக பிரஜைகளுக்கு அளிக்கப்பட்டிருக்கும் மேற்கண்ட ஜீவாதார உரிமைகளை அவர்கள் செலுத்துவதுபற்றி சில கட்டுப்பாடுகளை விதிக்கும் சட்டங்களும விதி முதலியவைகளும் செல்லும். ஆனால் இக்கட்டுப்பாடுகள் நியாயமானவைகளாக (Reasonable) இருக்க வேண்டும்; இரண்டாவதாக, இக்கட்டுப்பாடுகள் பொது ஜனங்களின் நலத்திற்காகவே ஏற்படுத்தப்பட்டிருக்க வேண்டும். அப்படி இருக்கும் சட்டங்களும் விதிகளும் தான் செல்லும்.

துப்பாக்கி வைத்துக் கொள்ள ஒவ்வொரு இந்தியப் பிரஜைக்கும் ஒரு ஜீவாதார உரிமை அளிக்கப்பட்டிருப்பதைக் கவனித்தோம். இது விஷயமாக கட்டுப்பாடுகள் ஏற்படுத்தும் ஆயுதச் சட்டமும் விதிகளும் நியாயமானவையாகவும், பொது ஜனங்களின் நன்மைக்காக ஏற்படுத்தப்பட்டவையுமாக இருந்தால் தான் அவை செல்லும் என்பதையும் கவனித்தோம். இதன்படி பார்த்தால் ஆயுதச் சட்டத்திலும் விதிகளிலும் அடங்கிய நிபந்தனைகள் நியாயமானவை தான் என்றும் அவை பொது ஜனங்களுடைய நன்மைக்காகவே தான் ஏற்பட்டவை என்றும் நீதிபதி அவர்கள் இவ்வழக்கில் அபிப்பிராயப்பட்டனர். யாவரும் ஒரு கட்டுப்பாடு அல்லாமல்

துப்பாக்கி வைத்துக்கொள்ள இடங்கொடுத்தால் பொது மக்களுக்கே அபாயம் ஏற்படலாம்; புரட்சிக்காரர்களுடைய கை ஓங்கலாம்; கொலைகளும் குற்றங்களும் அதிகரிக்கலாம்; சமூகத்தின் அமைதியே குலைந்துவிடக் கூடும். ஆகையால் யார் யார்தான் துப்பாக்கி வைத்துக்கொள்ள வேண்டும் என்று கட்டுப்பாடு செய்வது பொது மக்களின் நன்மைக்காகவே. அது விஷயத்தை ஒழுங்குபடுத்தும் ஆயுதச் சட்டமும் விதிகளும் நமது ஜீவாதார உரிமைக்கு முரணாக இருந்தாலும், அவை அரசியல் அமைப்புச் சட்டத்தால் அனுமதிக்கப்பட்டவைகளே; ஆகையால் அவை செல்லுமென நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டிருக்கின்றனர்.

ஆனால் ஒருவருக்குத் துப்பாக்கி லைசென்சு கொடுப்பதா வேண்டாமா என்பதைப்பற்றி ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டானவர் ஒரு நீதிபதியைப்போல் ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வர வேண்டும். அவர் காற்று வாக்கில் எதை வேண்டுமானாலும் உத்தரவு செய்யக் கூடாது. அவர் என்ன உத்தரவு செய்தாலும் அதன் காரணங்களை அவருடைய உத்தரவில் காண்பிக்க வேண்டும். அவருடைய உத்தரவின் பேரில் அப்பீல் உண்டு. ஆகையால் காரணமே காட்டாமல் ஜில்லா மாஜிஸ்ட்ரேட் ஒரு உத்தரவு செய்திருந்தால், அவ்வுத்தரவு சரியா தவறா என்று அப்பீல் அதிகாரி எப்படி ஒரு முடிவுக்கு வருவார்? ஜில்லா மாஜிஸ்ட்ரேட் செய்யும் உத்தரவில் அதற்கான காரணங்கள் காட்டியிருந்தால் தான் 'நியாயமான' கட்டுப்பாடுகளை விதிப்பதாகும்.

நரசிம்ம ரெட்டியார் கொடுத்த துப்பாக்கி லைசென்சு மனுவின் பேரில் ஜில்லா மாஜிஸ்ட்ரேட் செய்த உத்தரவில்—"இம்மனுவில் கேட்கப்படும் துப்பாக்கி லைசென்சு கொடுக்கப்பட மாட்டாது."—என்ற உத்தரவில், 'ஏன்' அவருக்கு லைசென்சு கொடுக்கக் கூடாதென்று யாதொரு காரணமும் சொல்லப்படவில்லை. ஆகையால் அவ்வுத்தரவு நியாயமானதல்ல; செல்லாதென உயர் நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டு அவ்வுத்தரவை ரத்து செய்தனர்.

ஆனால் மறுபடியும் நரசிம்ம ரெட்டியின் துப்பாக்கி லைசென்சு மனுவை ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டானவர் சட்டப்படி பரிசீலனை செய்து புதிதாக ஒரு உத்தரவைச் செய்யவேண்டும் என்றும் உயர் நீதிபதி அவர்கள் உத்தரவிட்டனர்.

நரசிம்ம ரெட்டிக்கு துப்பாக்கி லைசென்சு கொடுக்கப்பட்டதா கொடுக்கப்படவில்லையா என்று நமக்குக் கவலை ஒன்றுமில்லை. துப்பாக்கி லைசென்சு சம்பந்தமான நமது உரிமைகளையும் சட்டதிட்டங்களையும் இத்தீர்ப்பின் மூலம் நாமும் தெரிந்து கொண்டோம்; ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டுகளும் தெரிந்து கொண்டிருப்பார்கள்.

## "காமலீலை"—புத்தகம் பிரசுரம் செய்தவர் தண்டனை அடைந்தார்.

(ஆதாரம்:—1953 ஆல் இந்தியா ரிபோர்ட்டர்—மதராஸ் 418).

குற்றங்களைக் குறித்த சட்டமாகிய இந்தியன் பீனல் கோடு என்ற சட்டத்தின் செக்ஷன் 292ல் இருப்பது இதுதான் :— (a) ஒருவர் எந்த ஆபாசமான (obscene) புத்தகத்தையோ, துண்டுப் பிரசுரத்தையோ, பத்திரிகையையோ, சித்திரத்தையோ, படத்தையோ, ரூபம் அல்லது உருவத்தையோ விற்றாலும், வாடகைக்கு விட்டாலும், விநியோகம் செய்தாலும், பகிரங்கமாக யாவரும் பார்க்கும்படி வைத்தாலும், அல்லது பரவச் செய்தாலும், அல்லது மேற்கண்ட காரியங்களுக்காக அவற்றை உற்பத்தி செய்தாலும் சரி, தம் வசம் வைத்திருந்தாலும் சரி, (b) மேற்கண்ட காரியங்களுக்காக ஒருவர் ஆபாச சரக்குகளை தெரிந்தே இறக்குமதி செய்தாலும், ஏற்றுமதி செய்தாலும், எடுத்துச் சென்றாலும் (c) மேற்கண்ட காரியங்களுக்காக நடத்தப்படும் தொழில் என்று தெரிந்தே ஒருவர் அதன் லாபத்தை அடைந்து வந்தாலும் (d) மேற்கண்ட குற்றச் செய்கைகளில் ஈடுபட்டிருக்கும், அல்லது ஈடுபடத் தயாராக இருக்கும் நபர்களைப் பற்றி ஒருவர் விளம்பரம் செய்தாலும் அல்லது ஆபாசமான சரக்குகள் இன்னாரிடம் கிடைக்குமென்று விளம்பரப்படுத்தினாலும் (e) இந்த செக்ஷன்படி குற்றமாகும் செய்கைகளைச் செய்வதாக ஒருவர் ஒப்புக்கொண்டாலும், செய்ய எத்தனப்பட்டாலும், அவருக்கு மூன்று மாத சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படலாம்.

விதிவிலக்கு:—உண்மையாக மதசம்பந்தமாக இருக்கும் புத்தகங்கள், துண்டுப் பிரசுரங்கள், எழுத்துக்கள், படங்கள் இவைகளுக்கும், கோயில்களிலும், தேர்களிலும் செதுக்கப்பட்டிருக்கும் அல்லது வரையப்பட்டிருக்கும் உருவங்களுக்கும் படங்களுக்கும் இந்த செக்ஷன் பொருந்தாது. இதுதான் இந்தியன் பீனல்கோடு என்ற குற்றங்களையும் அவற்றிற்குரிய தண்டனைகளையும் விவரிக்கும் சட்டத்தில் "ஆபாசமான",

புத்தகங்கள், பத்திரிகைகள், படங்கள் முதலியவற்றைப்பற்றி இருப்பது. பிரஸ்தாப வழக்கானது 'காம லீலை' என்ற ஒரு புத்தகத்தை அச்சடித்து பிரசுரம் செய்தவர் மீதும், அச்சகம் வைத்திருப்பவர் மீதும் சர்க்காரால் இந்த செக்ஷன்படி கொண்டுவரப்பட்டது. அப்புத்தகத்தில் வேறு ஒன்றுமில்லை. ஒரு பக்கத்தில் ஆண்பெண் புணர்ச்சியின் பலான நிலைகளைச் சித்தரிக்கும் படங்களும் எதிர்ப் பக்கத்தில் அதன் விளக்கமும் தான் அச்சடிக்கப்பட்டிருந்தது. போலீசாரால் கைப்பற்றப்பட்டிருந்த இப்புத்தகங்களிலிருந்தும் இவற்றைப் பிரசுரித்தவருடைய கணக்கு வழக்குகளிலிருந்தும் இவை விற்பனைக்காகவே பிரசுரம் செய்யப்பட்ட விஷயமும், எத்தனை பிரதிகள் அச்சடிக்கப்பட்டன என்ற விஷயமும் ருசுவாயிற்று. இரண்டு எதிரிகளும் மாஜிஸ்ட்ரேட்டால் தண்டிக்கப்பட்டனர். அதன் பேரில் ஹைகோர்ட்டில் அப்பீல் நடந்தது.

அப்பீல் விசாரணையில் மூன்று பிரச்னைகளைப் பற்றி முக்கியமாக விவாதம் செய்யப்பட்டன. அவையாவன:—(1) இப்புத்தகத்திலிருப்பது 'ஆபாசமான' விஷயமா? (2) இதைப்போல் வேறு எவ்வளவோ புத்தகங்கள் பிரசுரம் செய்யப்பட்டிருக்கின்றனவே. அவர்கள் மீதெல்லாம் சர்க்கார் யாதொரு நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளாமல் இப்புத்தகம் போட்டவர் மீது மட்டில் நடவடிக்கை எடுத்தது சரியா? (மற்றவர்கள் போட்ட சில புத்தகங்களும் இவ்வழக்கில் தாக்கல் செய்யப் பட்டன.) (3) பத்திரிகை ஆட்சேபகரச் சட்டம் என்ற 1951-ஆம் வருடத்திய 56-ஆவது மத்திய சட்டம் தான் இவ்வழக்குக்குப் பொருந்தும். அதன்படி ஆபாசமான புத்தகங்களைச் சர்க்கார் பறிமுதல் செய்துவிடலாமே ஒழிய, அவற்றைப் பிரசுரம் செய்தவரை தண்டிக்க முடியாது. இப்புதுச் சட்டத்தால் பீனல் கோடு சட்டத்தின் செக்ஷன் 292 என்பது ரத்தானதாகவே பாவிக்கப்பட வேண்டும்.

இம் மூன்று பிரச்னைகள் சம்பந்தமாயும் உயர் நீதிபதி சோமசுந்தரம் அவர்கள் இவ்வழக்கில் அபிப்பிராயம் கொடுத்திருக்கின்றனர்.

'ஆபாசமான' (Obscene) என்ற வார்த்தைக்குப் பீனல் கோடு சட்டத்தில் தனியாக யாதொரு அர்த்தமும் விளக்கப்படவில்லை. ஆகையால் அவ்வார்த்தைக்குச் சாதாரணமாக அகராதிகளில் (Dictionaries) கொடுக்கப்பட்டிருக்கும் அர்த்தம் தான் பொருந்தும். அப்படிப் பார்த்தால், சிற்றின்ப எண்ணங்களைத் தூண்டுவதும் கற்புக்குக் கேடு விளைவிக்கக் கூடியதுமான விஷயங்கள்தான் 'ஆபாச' விஷயங்களாகும் என்று பொருள்படும்படி இருக்கிறது. அதன்படி பிரஸ்தாப வழக்கில் சம்பந்தப்பட்ட புத்தகமானது 'ஆபாசப் படங்களும் விஷயங்களும் அடங்கியதுதான் என்று தீர்மானிக்கப்பட்டது. இரண்டாவது கட்சி சம்பந்தமாக—மற்றவர்கள் குற்றம் செய்தும் அகப்பட்டுக் கொள்ளாமலிருப்பதால் பிரஸ்தாப வழக்கில் சம்பந்தப்பட்ட புத்தகங்களில் 'ஆபாச' விஷயங்கள் இல்லை என்று ஏற்படாது. இவ் வழக்கு சம்பந்தமான பிரசுரத்தை மட்டில் கவனித்து அதிலிருப்பது 'ஆபாச'மான விஷயங்களா அல்லவா என்று சொல்லவேண்டுமே ஒழிய வேறு பிரசுரங்களைக் கவனிக்கத் தேவை இல்லை என நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டனர். மூன்றாவது கட்சி புதிய சட்டமானது, ஆபாச விஷயங்கள் பரவாமல் முன் கூட்டியே தடுப்பதற்காக உபயோகிக்கக்கூடிய ஒரு சட்டமென்றும் அதனால் குற்றம் நடந்த பிறகு தண்டனை விதிக்கும் பீனல் கோடு சட்டத்திலிருக்கும் ஷரத்து ரத்தாகிவிடாதென்றும் நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டு, 'காமலீலை' புத்தகத்தை அச்சடித்து பிரசுரம் செய்தவர் மீது மட்டில் கொஞ்சம் குறைவான தண்டனை விதிக்கப் பட்டது. அச்சகம் வைத்திருப்பவர் மீது சட்டப்படிக்கான ருசு ஒன்றுமில்லாமலிருந்ததால் அவர்மீது ஏற்பட்ட தண்டனை ரத்து செய்யப்பட்டது.

---

(முன் 10-ம் பக்கத் தொடர்ச்சி)

லைசென்சு மனு:—லைசென்சுக்கு மனுப் போட வேண்டியவர்கள் வரி விதிக்கப்படாதவராக இருந்தால் உதவி கமர்சியல் டாக்ஸ் ஆபீசருக்குப் போட வேண்டுமென்று விற்பனை வரி விதி 5 (2)ல் இருக்கிறது. எ. சி. டி. ஓ. இல்லாத இடங்களில் டி. சி. டி. ஓவுக்கு லைசென்சு கோரும் மனுப் போடலாமென்று இப்போது சேர்க்கப் பட்டிருக்கிறது.

(24—6—1953—சென்னை சர்க்கார் கெஜட்—பாகம் IA ரூல் சப்ளிமெண்ட்—பக்கம் 240.)



# சென்னை கிராமப் பஞ்சாயத்துச் சட்டம் – 1950

[The Madras Village Panchayats Act—1950. 1950-ஆம் வருடத்திய 10-ஆவது சென்னைச் சட்டம். சென்னைச் சட்ட மன்றத்தால் நிறைவேற்றப்பட்டது. 15—7—50-ல் ஜனதிபதி அவர்களின் அங்கீகாரம் பெற்றது. 1—8—1950 தேதியுள்ள சென்னைச் சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்டது. 1—4—1951 முதல் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. பஞ்சாயத்துச் சட்டம், அது சம்பந்தமான விதிகள், சர்க்கார் அறிக்கைகள் முதலியவைகள் எல்லாவற்றையும் சேர்த்து 1952 பிப்ரவரி மாத "வக்கீல்" இதழ் முதல் தொடர்ச்சியாகவும் விவரமாகவும் விளக்கம் செய்யப்பட்டு வருகிறது.]

[சென்ற மாத இதழில் கிராம பஞ்சாயத்து எல்லைக்குள் ஸ்தாபிக்கப்படும் எந்த எந்தத் தொழில்களுக்கு தொழிற்சாலைகளுக்கும் பஞ்சாயத்திடம் லைசென்சு வாங்கிக்கொள்ள வேண்டுமென்றும், லைசென்சு வாங்குவது புதுப்பிப்பது சம்பந்தமான ஷரத்துக்களையும் கவனித்தோம். அடுத்தபடியாக பஞ்சாயத்துச் சட்டத்திலிருக்கும் சில பொதுவான ஷரத்துக்கள் இப்போது விளக்கப்படுகின்றன.]

## கட்டடங்களுக்கு நம்பர் போடுவது பற்றி

செக்ஷன் 95

(1) இச்சட்டம் அமுலில் இருக்கும் இடங்களில், இச்சட்ட விதிகளால் குறிப்பிடப்படும் அதிகாரியானவர், எந்தக் கட்டடத்தின் வாயில் கதவிலேயோ அல்லது எந்த இடத்திலும் நுழையும் வாயிலிலேயோ ஒரு 'நம்பர்' (எண்) போடலாம்.

27-5-1951 கெஜட் அறிக்கை 28-விதி

இவ்விதம் நம்பர் போடவேண்டிய அதிகாரிகள் யார் என்றும் சர்க்கார் விதி செய்திருக்கின்றனர். பஞ்சாயத்து அமைக்கப்பட்டிருக்கும் இடங்களில் அப்பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரியும், பஞ்சாயத்து அமைக்கப்படாத இடங்களில் அங்கங்கே அதிகாரமுள்ள தாசில்தார் அல்லது டிப்டி தாசில்தாரும் தான் மேற்கண்டபடி நம்பர் போடும்படி செய்யவேண்டிய அதிகாரிகளாவார்கள்.

(2) அவ்விதம் போடப்படும் எண்களையும் சரி 1948 அல்லது 1949–ஆம் வருடத்தில் வயது வந்த யாவருக்கும் வாக்குரிமை கொடுக்கும் அடிப்படையில் வாக்காளர் ஜாப்தா தயார் செய்யப்பட்டது சம்பந்தமாக கட்டடங்களுக்குப் போடப்பட்ட எண்களையும் சரி, எவரும் சட்டரீதியாக அப்படிச் செய்ய அதிகாரம் இருந்தாலொழிய, அழிக்கவும், மாற்றவும் கூடாது.

(3) மேலே (1) ஆவது உட்பிரிவின்படி போடப்பட்ட எண்களைப் பாதுகாப்பதும் அது அழிந்துபோய் விட்டால் அதை மறுபடியும் போடுவதும், கட்டடத்தின் சொந்தக்காரருடைய கடமையாகும். அவர் அவ்விதம் செய்யத் தவறினால் மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் அதிகாரியானவர் கட்டட சொந்தக்காரருக்கு நோட்டீஸ் கொடுத்து அவ்விதம் செய்யும்படி உத்தரவிடலாம்.

## லைசென்சுகளும் அனுமதிகளும்

செக்ஷன் 96

(1) இச்சட்ட ஷரத்துக்களின்படியோ அல்லது விதிகள், உபவிதிகள், அல்லது ரெகுலேஷன்களின்படியோ லைசென்சு அல்லது பர்மிஷன் (அனுமதி) கொடுக்கும்படி

கோரி போடப்படும் மனுக்கள், எந்த வருடத்திற்கோ அல்லது அதற்குச் குறைவான காலத்திற்கோ லைசென்சு அல்லது அனுமதி கேட்கப்படுகிறதோ அதற்கு முப்பது நாட்களுக்கு முன்னதாகவே போடப்படவேண்டும்; ஆனால் தொண்ணூறு நாட்களுக்கும் முன்னதாகவே போடக் கூடாது. ஆனால் இச்சட்டத்தாலோ விதிகளாலோ விதிவிலக்கு அளிக்கப்பட்டிருந்தால் அவைகளுக்கு மேற்கண்ட விதி கிடையாது.

(2) ஒவ்வொரு லைசென்சு அல்லது அனுமதிக்கும் பஞ்சாயத்தானது ஒரு கட்டணம் விதிக்கலாம். எவ்வளவு எவ்வளவு 'யூனிட்' அல்லது அளவுக்கு எவ்வளவு எவ்வளவு கட்டணம் என்பதையும் பஞ்சாயத்தே நிர்ணயம் செய்து கொள்ள வேண்டும். ஆனால் சர்க்காரால் விதிகள் மூலம் இது சம்மந்தமாக ஒரு உச்ச விகிதம் நிர்ணயம் செய்யப்பட்டிருந்தால், பஞ்சாயத்தால் நிர்ணயம் செய்யப்படும் கட்டண விகிதங்கள் அதற்குமேல் இருக்கக் கூடாது.

(3) லைசென்சு அல்லது அனுமதிக்காகப் போடப்படும் மனுவானது பஞ்சாயத்து நிர்வாக அதிகாரியிடம் கிடைத்த முப்பது நாட்களுக்குள் அம்மனுவின் பேரில் என்ன உத்தரவு செய்யப்பட்டதென்ற விஷயம் மனுதாருக்குத் தெரிவிக்கப்படாவிட்டால், மனுவில் கேட்கப்படும் லைசென்சு அல்லது அனுமதி கொடுக்கப்பட்டு விட்டதாகவே கருதப்படும். அதாவது, சாதாரணமாக எந்த கால அளவுக்கு அவ்வித லைசென்சு அல்லது அனுமதி கொடுக்கப்படுமோ அந்தக் காலத்திற்கு இச்சட்டம், விதிகள் உபவிதிகள் ரெகுலேஷன்கள் மேலும் சாதாரணமாக விதிக்கப்படும் நிபந்தனைகள் இவைகளுக்குட்பட்டு மேற்கண்ட லைசென்சு அல்லது பர்மிட் கொடுக்கப்பட்டதாக பாவிக்கப்படும். மேலே 'முப்பது நாட்கள்' என்று இருப்பதை சில வகை விஷயங்கள் சம்பந்தமாக அதிகப்படுத்தி, சர்க்கார் விதிகள் செய்யலாம்.

(4) லைசென்சு அல்லது அனுமதிக்கான கட்டணங்கள் முன்னதாகவே ஏற்றுக்கொள்ளப்பட்ட காரணத்தினால், கேட்கப்படும் லைசென்சு அல்லது அனுமதி கொடுக்கப்பட்டு விட்டதாக ஏற்படாது. ஆனால், லைசென்சு அல்லது அனுமதி கொடுக்கப்படாமல் மறுதளிக்கப்பட்டால், தாம் செலுத்திய கட்டணத்தை மனுதார் வாபஸ் பெற உரிமை உள்ளவராவார்.

(5) லைசென்சு அல்லது அனுமதி பெற்றுக்கொண்டு செய்யப்படவேண்டிய ஒரு காரியமானது லைசென்சு அல்லது அனுமதியில்லாமலே செய்யப்பட்டாலும் சரி, அல்லது லைசென்சு அல்லது அனுமதியில் கண்டிருக்கும் நிபந்தனைகளுக்கு முரணாகச் செய்யப்பட்டாலும் சரி, அவ்விதக் காரியம் செய்பவருக்கு பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரி ஒரு 'நோட்டீஸ்' கொடுத்து, அந்நோட்டீசில் குறிப்பிடப்பட்டிருக்கும் காலத்திற்குள் எந்த ஸ்தாவர ஜங்கம சொத்து பூராவையுமோ, ஒரு பாகத்தையோ மாற்றியோ, அப்புறப்படுத்தியோ கூடுமான வரையில் முன் இருந்த நிலையிலேயே அதை வைக்கும்படி அக்காரியம் செய்தவருக்கு அந்நோட்டீஸ் மூலம் உத்தரவு செய்யலாம். மேலும், அவ்விதக் காரியம் செய்தவருக்கு இச்சட்டத்தில் குறிப்பாக யாதொரு தண்டனையும் விதிக்கப்படாமலிருந்தால், அவர் செய்யும் ஒவ்வொரு குற்றத்திற்கும் ரூபாய் ஐம்பதுக்கு அதிகப்படாத அபராதம் விதிக்கப்படலாம்.

(6) லைசென்சு அல்லது பர்மிஷன் (அனுமதி) வாங்கிக்கொள்ளாத குற்றத்திற்காக ஒருவர் மாஜிஸ்ட்ரேட்டால் தண்டிக்கப்பட்டால், அவருக்கு விதிக்கப்படும் அபராதத்தொகை தவிர, அவர் லைசென்சு அல்லது பர்மிஷனுக்காகச் செலுத்த வேண்டிய கட்டணத்தையும் மாஜிஸ்ட்ரேட் வசூலித்து சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்கு அதைக்கொடுத்து விடவேண்டும். மேலும் மாஜிஸ்ட்ரேட்டுக்கு யுக்தமாகத் தோன்றினால், அவ்வழக்கை நடத்துவதற்காக பஞ்சாயத்துக்கு ஏற்பட்ட செலவு தொகைகளையும் மாஜிஸ்ட்ரேட் எதிரியிடம் வசூல்செய்து பஞ்சாயத்திடம் கொடுத்துவிடலாம்.

விவரணம். லைசென்சு அல்லது பர்மிஷனுக்காக மேலே கண்டபடி கட்டணத்

தொகை வசூல் செய்யப்படுவதால், தண்டனை அடைந்தவருக்கு லைசென்சோ அல்லது பர்மிஷனே கொடுத்துவிட்டதாக ஏற்படாது.

### சர்க்காரும் மார்கெட் கமிட்டிகளும் லைசென்சு வாங்கவேண்டியதில்லை.

செக்ஷன் 97

இச்சட்டத்திலோ, விதிகள், உபவிதிகள் அல்லது ரெகுலேஷன்களிலோ லைசென்சு அல்லது பர்மிஷன் சம்பந்தமாய் இருக்கும் ஷரத்துக்கள் எதுவும் மத்திய சர்க்கார், ராஜ்ய சர்க்கார் அல்லது 1933-ம் வருடத்திய சென்னை வியாபார விளைபொருள் மார்கெட்டுச் சட்டப்படி ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் மார்கெட்டுக் கமிட்டிகள்— இவர்களிடம் இருக்கும் சொத்துக்களுக்கும், இவர்களுடைய நிர்வாகத்திலிருக்கும் சொத்துக்களுக்கும் இவர்களுக்குச் சொந்தமான சொத்துக்களுக்கும் கிடையாது.

### நோட்டீசுகள் உத்தரவுகள் முதலியவற்றை வற்புறுத்தும் அதிகாரம்

செக்ஷன் 98

(1) இச்சட்டப்படிக்கோ அல்லது விதிகள் உபவிதிகள் அல்லது ரெகுலேஷன்களின்படிக்கோ பிறப்பிக்கப்படும் நோட்டீசுகளிலும் உத்தரவுகளிலும் ஒருவர் ஒரு வேலையைச் செய்து முடிக்கவேண்டுமென்றோ, அல்லது ஒரு காரியத்தைச் செய்ய வேண்டுமென்றோ குறிப்பிடப்பட்டிருந்தால், அப்படிச் செய்ய ஒரு நியாயமான கெடுவும் அதிலேயே குறிப்பிடப்பட்டிருக்கவேண்டும்.

(2) அந்த நோட்டீசு அல்லது உத்தரவுகளில் கண்டிருக்கும் கெடுவுக்குள் அக்காரியம் அல்லது வேலை செய்யப்படாவிட்டால், அவ்வேலைகளையும் காரியங்களையும் செய்துமுடிக்க பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரியே ஏற்பாடு செய்யலாம். மேலும் அவ்வேலை அல்லது காரியத்தைச் செய்யத் தவறியவருக்குக் குறிப்பாக இச்சட்டத்தில் யாதொரு தண்டனையும் விதிக்கப்படாமலிருந்தால் அவர் செய்யும் ஒவ்வொரு குற்றத்திற்கும் ரூபாய் ஐம்பதுக்கு அதிகப்படாமல் அபராதம் விதிக்கப்படலாம்.

### சோதனை செய்யும் அதிகாரங்கள்

செக்ஷன் 99

(1) விதிகளில் கண்டிருக்கும் நிபந்தனைகளுக்குட்பட்டு கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் காரணங்களுக்காக எந்த இடத்திலும், கட்டடத்திலும், நிலத்திலும், பஞ்சாயத்து நிர்வாக அதிகாரியோ அவரிடம் அதிகாரம் பெற்றவரோ, முன் அறிவிப்பு செய்தோ செய்யாமலோ, உதவியாட்கள், வேலையாட்கள் இவர்களுடனோ இவர்கள் இல்லாமலோ பிரவேசிக்கலாம். அதாவது (a) இச்சட்டம், விதிகள் உபவிதிகள் ரெகுலேஷன் அல்லது உத்தரவுகளின்படி அவசியமான ஒரு விசாரணை செய்யவோ, சோதனை செய்யவோ, பரீட்சை செய்யவோ, பரிசீலனை செய்யவோ, அளக்கவோ, மதிப்பிடவோ, வேறு காரியங்களைச் செய்யவோ அல்லது (b) லைசென்சு அல்லது பர்மிஷனுடன் செய்யப்பட வேண்டிய வேலைகளுக்கு லைசென்சு அல்லது பர்மிஷன் இருக்கிறதா என்று பார்க்கவும், அவற்றில் கண்ட நிபந்தனைகளின்படி நடக்கின்றனவா என்று பார்க்கவும் — மேற்கண்டபடி பிரவேசிக்கலாம்.

(2) மேலேகண்ட அதிகாரங்களைச் செலுத்துவதாலோ, உள்ளே பிரவேசிக்கத் தேவையான பலாத்காரத்தை உபயோகப்படுத்தியதாலோ ஒருவருக்கு நஷ்டம் ஏற்பட்டாலும், அசௌகரியம் ஏற்பட்டாலும் அது சம்பந்தமாக அவர் எவ்வித நடவடிக்கையும் எடுத்துக்கொள்ள முடியாது.

### எடைகளையும் அளவைகளையும் பரிசோதிப்பது

செக்ஷன் 100

குற்றங்களைப் பற்றிய இந்தியன் பீனல் கோடு சட்டத்தின் 13-ஆவது அத்தியாயத்தில் எடை அளவைகள் விஷயமாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் குற்றங்களைத் தடுக்கும் பொருட்டும் குற்றம் செய்தவர்களைத் தண்டிக்கும் பொருட்டும் அக்கிராமத்தில் மார்கெட்டுகளிலும் கடைகளிலும் உபயோகிக்கப்படும் எடைகளையும் அளவை

களையும் சோதனை செய்ய பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரிக்கும் அவரிடம் அதிகாரம் பெற்ற அதிகாரிக்கும் அதிகாரம் உண்டு.

### கிராமப் பெரியதனக்காரர்களிடமிருந்தும் கர்ணங்களிடமிருந்தும் தகவல் கேட்கும் அதிகாரம்

செக்ஷன் 101

(1) பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரியானவர் அப்பஞ்சாயத்தில் அடங்கிய ரிவின்யூ கிராமத்தின் பெரிய தனக்காரருக்கோ கர்ணத்திற்கோ இருவருக்குமோ எழுத்து மூலம் உத்தரவு பிறப்பித்து, அக் கிராமத்தைப் பற்றியோ, அதன் ஒரு பாகத்தைப்பற்றியோ அல்லது அதிலிருக்கும் நபர்கள் பற்றியோ சொத்துக்கள் பற்றியோ தகவல் கொடுக்கும்படி கேட்கலாம். எந்த எந்த விஷயங்களைப்பற்றி இவ்விதம் தகவல் கேட்கலாமென்று விதிகள் ஏற்படும்.

(2) எந்த கெடுவுக்குள் மேற்கண்டபடி தகவல் அனுப்பப்படவேண்டுமென்று தம் உத்தரவில் கெடு குறிப்பிடவும் அக் கெடுவை அவ்வப்பொழுது நீடிக்கவும் நிர்வாக அதிகாரிக்கு அதிகாரமுண்டு.

(தொடரும்)



## சல்தானியா படை மருந்து

இது 37 வருடங்களாக இந்தியா, பர்மா, சிலோன், மலேயா, இந்தோ - சைனா முதலிய நாடுகளில் கோடிக்கணக்கான மக்களுக்கு நிவாரணமளித்து நற்கியாதியுடன் தங்க மெடல்களும் நற்சாட்சிப் பத்திரங்களும் பெற்றது.

எல்லாவித படை, சொறிசிரங்கு, கக்கூஸ் பத்து, அரிப்பு, வண்டுகடி, புழுக்கடி எச்சிற்றழும்பு, கருநிறமுள்ள தடிப்பு, மேகப்படை முதலிய தோல் வியாதிகளை உடனே குணப்படுத்தும்.

பெரிய சைஸ் பாட்டில் ஒன்று அணா 12.
சிறிய ,, ,, ,, அணா 6.

எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள்:— ஜெயரசம் டிப்போ,
அய்யம்பேட்டை S. Ry.




இப்பகுதியில் நமது வாசகர்கள் கேட்கும் சட்ட சம்பந்தமான கேள்விகளுக்கு மட்டில் பத்திரிகையில் இடமிருக்கும் வரை பதில் அளிக்கப்படும். கேள்வி கேட்பவர்கள் தங்கள் சொந்த விவகாரங்களைப்பற்றி எழுதக்கூடாது. சட்டங்களிலோ, விதிகளிலோ ஏற்படக்கூடிய சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் முறையில்தான் கேள்விகள் இருக்கவேண்டும். கேள்விகள் சுருக்கமாய் இருக்கவேண்டும். ஒவ்வொரு கேள்வியும் தனித்தனியான காகிதத்தில், பதில் எழுத இடம் விட்டு எழுதி அனுப்பவேண்டும். தவிர ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பிரதிகள் அனுப்பவேண்டும். ஒவ்வொரு கேள்வியிலும் குறிப்பிடப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களுக்கு மட்டில் தான், அதன் 'பதில்' பொருந்தும். கேள்விகளுக்குச் சொல்லப்படும் பதில் அபிப்பிராயமே. கேள்விகளுக்கு நேரில் பதில் அனுப்புவது இயலாது.

ஒவ்வொரு மாதமும் முதல் தேதி முதல் 10ஆம் தேதிக்குள் அனுப்பப்படும் கேள்விகளுக்குத்தான் அடுத்த இதழில் பதில் சொல்லுவது சாதாரணமாகச் சாத்தியமாகும்.

### பஞ்சாயத்தில் சொந்த மார்க்கெட்டுகள்.

*117.* **கேள்வி:** (முகம் — செங்குன்றம்.) ஒரு கிராமத்தின் சொந்தக்காரரால் ஒரு பொது மார்க்கெட் நடத்தப் படுகிறது. அதன் வருவாயைக் கொண்டு ஒரு தரும வண்டி தங்கு மிடமும், தரும சத்திரமும் நடத்தி வருகிறார்கள். ஷை மார்க்கெட்டை ஒரு குத்தகைதார் அவ்வூர் பஞ்சாயத்து போர்டில் லைசென்சு பெற்று நடத்தி வருகிறார். ஆனால் அவர் பஞ்சாயத்து விதிகளின்படி நடக்காமல் தான் யுக்தானுசாரம் போல் மார்க்கெட்டில் வசூல் செய்கிறார். ஷை வசூல் செலவு விபரம் கணக்குகளை பஞ்சாயத்து போர்டாருக்கு காண்பிப்பதுமில்லை. மேற்படியாரின் பேரில் பஞ்சாயத்து போர்டு நடவடிக்கை எடுக்கலாமா? ஷை மார்க்கெட்டை பஞ்சாயத்து போர்டே எடுத்து நடத்த உரிமை இருக்கிறதா?

**பதில்:** சொந்த மார்க்கெட்டுக்காரர்களும் அம் மார்க்கெட்டுக்களைக் குத்தகைக்கு எடுத்து நடத்துபவர்களும் வசூல் செய்ய வேண்டிய கட்டணங்கள், அவர்கள் கொடுக்க வேண்டிய ரசீதுகள் டிக்கெட்டுகள், இவர்கள் வைத்துக் கொள்ள வேண்டிய கணக்குகள் முதலியவை பற்றி விதிகள் ஏற்பட்டிருக்கின்றன. (*21-8-1951*--தேதி சென்னை சர்க்கார் கெஜட்—பாகம் IA ரூல் சப்ளிமெண்ட் பக்கம் *187* ல் இவ்விதிகள் பிரசுரம் செய்யப்பட்டிருக்கின்றன. *1953* "வக்கீல்" மே இதழ் பக்கம் 23-பார்க்கவும்.) சொந்த மார்க்கெட்டுகளை நடத்த பஞ்சாயத்துச் சட்டத்தின் செக்ஷன் 82-ன்

படி கொடுக்கப்படும் லைசென்சிலேயே, அம்மார்கெட்டில் வசூல் செய்யப்பட வேண்டிய கட்டண விவரங்களும் மற்ற நிபந்தனைகளும் குறிப்பிடப்பட்டிருக்கும். லைசென்சில் கண்ட ஷரத்துக்கள் மீறப் பட்டால், உடனே லைசென்சை ரத்து செய்து மார்கெட்டை மூடிவிட பஞ்சா யத்துக்கு அதிகாரமுண்டு. (பஞ்சாயத்துச் சட்டம் செக்ஷன் 82. (2c) (5).)

### பழைய பஞ்சாயத்தில் அடங்கிய ஒரு ரிவன்யூ கிராமத்திற்குத் தனிப் பஞ்சாயத்து அமைப்பதெப்படி?

*118.* **கேள்வி:** (மூர்த்தி—ஊத்துக்குளி) ஒரு ரிவன்யூ கிராமமும் வேறு ரிவின்யூ கிராமத்தின் ஒரு பகுதியும் சேர்ந்து இப் போது ஒரு பஞ்சாயத்தாக இருக்கிறது. பகுதியாக இருக்கும் கிராமத்தை நீக்கி பூரா ரிவின்யூ கிராமம் மட்டில் பஞ்சா யத்து நடத்தச் சட்டம் இடம் கொடுக் குமா? அப்படியானல் யாருக்கு விண்ணப் பம் செய்து கொள்ள வேண்டும்?

**பதில்:** புதிய பஞ்சாயத்துச் சட்டத் தின் ஷிடியூல் 3 விதி 2-ன்படி பூரா ரிவன்யூ கிராமத்தின் ஜனத்தொகை 500 அல்லது அதற்கு மேல் இருந்து, அது போக அப்பஞ்சாயத்தில் பாக்கி இருக்கும் ஜனத் தொகையும் 500க்குக் குறையாமல் இருந்தால், அந்த ரிவின்யூ கிராமத்தை இப்போதிருக்கும் பஞ்சாயத்திலிருந்து விலக்கி புதிய சட்டத்தின் செக்ஷன் 3-ன் படி ஒரு தனிப் பஞ்சாயத்தாக அமைக்க இன்ஸ்பெக்டருக்கு அதிகாரமுண்டு. அது விஷயமாய் இன்ஸ்பெக்டருக்கு (Inspector of Municipal Councils and Local Boards, Madras) மனுப் போடலாம்.

### தஞ்சைச் சட்ட சாகுபடிதார் இறந்தால், மனைவிக்கு சாகுபடி உரிமை உண்டா?

*119.* **கேள்வி:** (ராஜு—ஆண்டாங் கோவில்) தஞ்சை ஜில்லாவில், ஒரு நிலச் சொந்தக்காரரிடம் இரண்டு மூன்று வருடங்களாகச் சாகுபடி செய்த ஒரு சாகுபடிதார் இறந்து விட்டார். இறந்த வருக்கு ஆண் வார்சுகளோ சகோதரர் களோ இல்லை. இரண்டு மனைவிகள் இருக் கின்றனர். இம்மனைவிகளுக்கு சாகுபடி செய்யும் பாத்தியம் உண்டா? அல்லது இறந்தவருக்கு மகனே, சகோதரரோ இருந்தால் தான் அவர்கள் சாகுபடி செய்யலாமா?

**பதில்:** தஞ்சைச் சட்டத்தின் செக்ஷன் 2 (d)—படி **"சாகுபடிதார்"** என் பதில் சாகுபடிதாரின் வார்சுகளும் சேர்ந்த வர்கள் என்று அர்த்தம் சொல்லப்பட் டிருக்கிறது. 'வார்சு' என்பது மகனாகவோ சகோதரனாகவோதான் இருக்க வேண்டு மென்பதில்லை. இறந்த சாகுபடிதாருக்கு யார் சட்டப்படி வார்சோ, அவர் அல்லது அவளும் இச்சட்டப்படி சாகுபடிதார்களா வார்கள். இறந்தவருடைய இரண்டு மனைவிகளுக்கும், தஞ்சைச் சட்டப்படி சாகுபடிதாருக்குள்ள உரிமைகள் உண்டு. வார்சுகளும் சரீர உழைப்பாளிகளாக இருக்க வேண்டுமென்ற நிபந்தனை இல்லை.

### முதல் மனைவியின் சம்மதத்துடன் மறுமணம் செய்து கொள்ளலாமா?

*120.* **கேள்வி:** (பழனி--திண்டுக்கல்) ஒரு இந்துவின் முதல் மனைவிக்குக் குழந்தை இருந்தும் முதல் மனைவியின் அனுமதி யோடு, இரண்டாம் கலியாணம் செய்து கொள்ளலாமா? இதில் ஹரி ஜனங்களுக்கு விசேஷ சலுகை உண்டா?

**பதில்:** முதல் மனைவி உயிருடன் இருக்கும் போது, விவாக ரத்து செய்து கொள்ளாமல், இரண்டாவது மணம் செய்து கொள்ளக் கூடாது. முதல் மனைவி சம்மதித்தும் உபயோகமில்லை. இவ்விஷ யத்தில் ஹரி ஜனங்களுக்கு யாதொரு சலுகையும் இல்லை.

### புத்தகமும் பத்திரிகையும்

*121.* **கேள்வி:** (லக்ஷ்மிநாராயணன் நகர் P. O.) ஒருவர் தனி வெளியீடாக ஒரு புத்தகம் எழுதி வெளியிட விரும்பி ஞல் அதற்கு ரிஜிஸ்டர் செய்து கொள்ள வேண்டுமா? பத்திரிகை தனி வெளியீ டாக எழுதி பிரசுரம் செய்ய அரசாங்கத் திடம் அனுமதி வேண்டுமா?

**பதில்:** தனியாக ஒரு புத்தகம் பிரசுரம் செய்ய ரிஜிஸ்டர் செய்து கொள்ள

வேண்டியதில்லை. ஆனால் பத்திரிகை நடத்த ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டிடம், அச்சகத்தாரும், பிரசுரம் செய்பவரும் பத்திரிகைச் சட்டப்படி உறுதி மொழிக் கையெழுத்து (Declaration) செய்த பிறகு தான் பத்திரிகை பிரசுரம் செய்ய லாம். ஒரே புத்தகத்தைப் பல பாகங் களாக வெளியிடுவது 'பத்திரிகை ஆகாது.

### தண்ணீர் பந்தல் தர்மப் பணத்தை வேறு காரியங்களுக்குச் செலவு செய்யலாமா?

*122.* **கேள்வி:** (தேவஸ்தான பத்திரிகை ஸ்ரீரங்கம்.) தண்ணீர்ப் பந்தலுக்காக வந்த பணத்தை தண்ணீர்ப் பந்தல் அவசிய மில்லை என்று வட்டியை வேறு செலவு செய்யவும், பெரிய மனிதர் விடுதி வாங்கி அசலையே செலவழிக்கவும் தர்மகர்த்தாக் கள், மத தர்ம இலாகா கமிஷனர், சர்க்கார் களுக்கு அதிகாரம் உண்டா?

**பதில்:** அக்குறிப்பிட்ட தர்மத்திற்கு சென்னை இந்துமத—தர்ம பரிபாலனச் சட்டம் விஸ்தரிக்கப் பட்டாலொழிய, அப்படிச் செய்ய அவ்வதிகாரிகளுக்கு உரிமை இல்லை. அச்சட்டம் அத்தர்மத் திற்கு விஸ்தரிக்கப் பட்டால், அச்சட்டத் தில் கண்ட வேறு விஷயங்களுக்கும் அப் பணத்தை செலவு செய்யலாம்.

### சுவீகார மகன்

*123.* **கேள்வி:** (லக்ஷ்மி - பாளையம்) ஒரு இந்துக் குடும்பத்தில் விதவையான தாயா ரும் இரண்டு பிள்ளைகளும் இருக்கிறார் கள். ஒரு பிதுரார்ஜித வீடு இருக்கிறது. அண்ணனுக்கு பெண் சந்ததிமட்டும். தம்பிக்கு ஆண் பெண் சந்ததியும் உண்டு. அண்ணனுக்குப் பிறகு அவர் மனைவி மூன்றிலொரு பாகத்தைப் பிரித்து வாங்கிக் கொள்ளவும் அதைப் பராதீனம் செய்யவும் முடியுமா? அண்ணன் இறந்த பிறகு அவர் மனைவி ஒரு ஆண் குழந்தையை சுவீகாரம் எடுத்துக் கொள்ளலாமா? அவ்விதம் எடுத்துக் கொண்டால், சொத்து விஷயமாக என்ன அனுகூலம் ஏற்படும்?

**பதில்:** அண்ணன் மனைவியானவள் தன்னுடைய பாகத்திற்கு கிடைத்த மூன்றிலொருபாக சொத்தைச் சாதாரண மாய்த் தன்னுடைய ஆயுள் வரை தான் அனுபவிக்கலாம்; பராதீனம் செய்ய முடியாது. அவள் சுவீகாரம் செய்து கொள்ளலாம். சட்டப்படி அவள் செய்து கொண்ட சுவீகார மகன் தான் அவளிட மிருக்கும் சொத்துக்களை அடைய உரிமை உள்ளவர்.

### மூன்றும் நபரிடம் இருக்கும் மத ஸ்தாபன சொத்துக்கள்.

*124.* **கேள்வி:** (L. 94) இந்து மத ஸ்தா பனங்களுக்குச் சொந்தமான டைடில் டீடு மூலம் கிடைக்கப்பட்ட நிலங்களை மூன்று வது நபர் அனுபவித்து வந்தால், அந்த நிலத்தைத் திரும்ப, அந்த ஸ்தாபனத்திற் காக அடையச் சட்டம் உண்டா? இதற்குக் காலாவதி உண்டா?

**பதில்:** மூன்றுவது நபரிடம் அந்நிலங் கள் எப்படி வந்தது என்று தெரிந்தால் தான் இக்கேள்விக்கு பதில் சொல்லுவது சாத்தியமாகும்.

### டிரஸ்டியே கோயில் சொத்தை மோசடியாக பரிவர்த்தனை செய்து கொண்டது செல்லுமா?

*125.* **கேள்வி:** (ஷை) 1932-ம் வருடத்தில் ஒரு கோயில் டிரஸ்டியானவர் அக்கோயி லுக்குச் சொந்தமான இரண்டு நிலங்களில் ஒன்று தமக்கும் தம் சகோதரருக்கும் சொந்தம் என்று சொல்லி, தேவஸ்தானக் கமிட்டி அங்கீகாரம் பெற்று அதைக் கோயிலுக்குக் கொடுத்து, மற்ற நிலத்தைத் தாங்கள் வாங்கிக் கொண்டு பரிவர்த்தனை செய்து கொண்டது சட்டப் படி செல்லுமா? ஷை நிலத்தை தேவஸ் தானம் மீண்டும் சுவாதீனம் செய்து கொள்ளச் சட்டம் இடம் கொடுக்குமா?

**பதில்:** மோசடி மூலம் செய்து கொண்ட இப்பரிவர்த்தனை செல்லாது. ஷை நிலத்தை தேவஸ்தானம் மீண்டும் சுவாதீன மடைய சட்டம் இடங் கொடுக் கும்.

## ஒரே தேதியில் கிரய சாசனமும், அதைத் திரும்ப வாங்க வர்த்தமான மும் இரண்டும் சேர்ந்து ஒரு அடமானமாகுமா?

**126. கேள்வி:** (தியாகராஜன்–ஆனை தாண்டவபுரம்) ஒருவர் வாங்கியிருந்த கடனுக்காகத் தம்முடைய நிலங்களைக் கடன் கொடுத்தவருக்கே சாசனம் செய்து கொடுத்தார். சாசனத் தேதியிலேயே சாசனம் வாங்கியவர் தனி ஸ்டாம்பில் நிலம் விற்றவருக்கு ஒரு வர்த்தமானம் எழுதி அதை ரிஜிஸ்டர் செய்து கொடுத் திருக்கிறார். அதில் கண்ட வாசகங்கள் பின் வருமாறு:—"நாளது தேதியில் தாங்கள் எனக்கு எழுதிக் கொடுத்திருக்கும் சுத்தக் கிரய சாசனத்தில் கண்ட நிலங்களை நாளது தேதி முதல் ஐந்து வருடங்களுக்குள் தாங்களாவது தங்களுடைய வார்சுகளா வது கிரய சாசனத்தில் கண்ட ரூபாயை என்னிடம் கொடுத்து விட்டால், தங்க ளுடைய செலவில் சாசனத்தில் கண்ட நிலங்களைத் தங்களுக்காவது தங்கள் வகையறுவுக்காவது மறு சாசனம் செய்து கொடுக்க சம்மதிக்கிறேன்.,, —என்று இருக்கிறது. "வக்கீல்"—பத்திரிகை 1952 மார்ச்சு இதழ்பக்கம் 19 ல் கண்ட தீர்ப்புப் படியும், அதில் கண்டிருக்கும் முல்லா என்ற பிரபல நூலாசிரியரின் அபிப்பி ராயப்படியும் இக் கிரயப் பத்திரமும் வர்த்தமானமும் சேர்ந்து ஒரு அடமான மாகுமா? அடமானமாகப் பாவித்து, வர்த்தமானத்தில் கண்ட கெடுவுக்குப் பிறகும், அந்நிலங்களை மீட்க முடியுமா?

**பதில்:** நிலத்தை வாங்கியவர் அதைத் திரும்ப விற்று விடுவதாக ஒப்புக் கொண்டு எழுதிக் கொடுத்திருக்கும் வர்த்தமானப் படி, அதில் கண்ட கெடுவுக்குள் தொகை செலுத்தி அந்த ஒப்பந்தத்தை வற்புறுத் தலாமே ஒழிய, கிரயப் பத்திரம் தனியாக வும் வர்த்தமானம் தனியாகவும் ஒரே சமயத்தில் ஏற்பட்டிருந்தாலும், அது இரண்டையும் சேர்த்து ஒரு அடமான மாக பாவித்து, கெடுவுக்குப் பிறகும் பணத்தைக் கொடுத்து சொத்தை மீட்கச் சட்டம் இடம் கொடுக்க வில்லை என்றும்; கிரயப் பத்திரத்திலேயே அக்கிரயச் சொத்தை திருப்பி தருவதற்கான ஷரத்து இருந்தால் தான், அது அடமானமாகு மென்றும் சமீபத்தில் ஏற்பட்ட ஒரு தீர்ப் பில் சென்னை ஹைகோர்ட் உயர் நீதிபதி கள் இருவர் அபிப்பிராயப் பட்டிருக்கின்ற னர். (*1953* (1) மதராஸ் லா ஜர்னல் பக்கம் *667*–பார்க்கவும். *1953* "வக்கீல்" ஜூன் இதழ் பக்கம் *19*–பார்க்கவும்.) இவ்வபிப்பிராயம் முல்லா என்ற பிரபல சட்ட நூலாசிரியருடைய அபிப்பிராயத் திற்கு முரணாகத்தான் இருக்கிறது.

## உயிலில் கீரல் தான் போடப்பட்டது ரிஜிஸ்டருமாக வில்லை அது செல்லுமா?

**127. கேள்வி:** (கோபால கோனார் அகரம் சீகூர்) ஒருவர் அடிபட்ட காயத் திற்காக சிகிச்சை செய்து கொள்ள ஆஸ்பத்திரி சென்று அங்கேயே இறந்து விட்டார். இறப்பதற்கு முன் இவர் ஒரு உயில் எழுதி வைத்தார். இவருக்குக் கையெழுத்துப் போடத் தெரிந்திருந்தும் காயம் ஏற்பட்டதால் போட முடியவில்லை. 'கீரல்' என்ற கையொப்பம் மட்டில் உயிலில் வாங்கப்பட்டது. உயில் ரிஜிஸ்ட ரும் ஆகவில்லை. ஷை உயில் மூலம் சொத் துக்களை அடைந்த அவருடைய மகன் அச் சொத்துக்களை விற்பனை செய்ய முடியுமா? உயில் செல்லுமா?

**பதில்:** உயில் செல்லும். உண்மையாக ஏற்பட்ட உயிலில், உயில் எழுதி வைத்த வர் கையெழுத்துப் போட முடியாத காரணத்தினால் கீரல் போட்டாலும் அது அவர் கையெழுத்துப் போட்டது போலத் தான். நல்ல ஞாபக சக்தியுடன் அவ்வித உயில் எழுதி வைத்து அதில் குறைந்தது இரண்டு சாட்சிகள் சாட்சிக் கையெழுத்து செய்திருந்தால் போதும். உயில் ரிஜிஸ்ட ராக வேண்டு மென்ற அவசியமில்லை. சட்டப்படி ஏற்பட்ட உயில் ரிஜிஸ்டராகா விட்டாலும் செல்லும். அவ்வித உயில் மூலம் சொத்தை அடையும் மகன் அதை விற்பனை செய்ய முடியும். இந்திய வார்சுச் சட்டத்தின் (The Succession Act *1925*) செக்ஷன் 63 (a) ஷரத்தின் படி உயில் எழுதி வைப்பவர் உயிலில் தன் கையெழுத்தைப் போட்டாலும் போட

லாம்; அல்லது தன்னுடைய அடையாளத்தை அதில் பொருந்தினாலும் பொருந்தலாம்; அல்லது தன்னுடைய முன்னிலையில் வேறு ஒருவரைத் தனக்காகக் கையெழுத்துப் போடும் படியும் செய்யலாமென்றும் இருக்கிறது. (45 பம்பாய் 939 ல் இருக்கும் வழக்கில் கையெழுத்துப் போடத் தெரிந்தவர் உயிலில் குறி தான் வைத்தார்—உயில் செல்லுமென்று தீர்ப்பு ஏற்பட்டது.)

## இனாம் சாசனத்தில்—பராதீனம் செய்யக்கூடாதென்ற நிபந்தனை

**128. கேள்வி:** (நாராயணசாமி-திருமங்கலம்) ஒருவர் மற்றொருவருக்கு ஒரு இனாம் சாசனம் எழுதி வைத்து, சொத்தை அடைபவர் அதை விற்கவும், ஈடு ஒத்தி எவ்வித வில்லங்கமும் செய்யக்கூடாதென்று அப்பத்திரத்தில் கண்டிருந்தால், சொத்தை அடைந்து அனுபவிப்பவர் அச்சொத்தை விற்கவோ, அடமானம் வைக்கவோ முடியுமா? அப்படிச் செய்தால் செல்லுமா?

**பதில்:** இனாமாகச் சொத்தை அடைபவர் அதை விற்கவும், ஈடு ஒத்தி எவ்வித வில்லங்கமும் செய்யக்கூடாதென்று அத்தருதியாகத் தடை விதிக்கும் ஷரத்து செல்லாது- (சொத்து மாற்றல் சட்டம்—Transfer of Property Act—செக்ஷன் 10.) ஆகையால் இனாமாகச் சொத்தை அடைபவர் அதைப் பராதீனம் செய்ய உரிமை உள்ளவர்.

## நிலம் ஒரு இடம்; கிணறு ஒரு இடம். தண்ணீர் கொண்டுபோக பாத்தியம் எப்படி?

**129. கேள்வி:** (ஷேக்முகமது—புத்தாநத்தம்). ஒருவருக்கு இரண்டு நிலங்கள் சொந்தம். ஒவ்வொன்றிலும் பாசனத்திற்காகத் தனித்தனிக் கேணி இருக்கிறது. அவர் முதலில் ஒருவருக்கு ஒரு நிலத்தையும் அதிலுள்ள கேணியில் பாதியையும் விற்றுவிட்டார். பிறகு இரண்டாவது நிலத்தையும் அதிலிருக்கும் கேணியையும், முதலில் தாம் விற்ற கேணியில் தாம் விற்காமல் வைத்துக்கொண்டிருக்கும் பாதிபாத்தியத்தையும் சேர்த்து வேறு ஒருவருக்கு விற்றுவிட்டார். இரண்டாவது நிலத்தை வாங்கியவர் முதல் நிலத்திலுள்ள கிணற்றிலிருந்து முதல் நிலத்தின் வழியாகத் தம்முடைய நிலத்திற்குத் தண்ணீர் பாய்ச்சிக் கொள்ள உரிமை உண்டா?

**பதில்:** கிடையாது.

## ஜில்லா போர்டு கண்ட்ராக்டருடைய தகப்பன் பஞ்சாயத்துத் தலைவராக வர முடியுமா?

**130. கேள்வி:** (L. 172) பாகப் பிரிவினை ஆகாத ஒரு கிறிஸ்துவக் குடும்பத்தில், மகன் ஜில்லா போர்டு 'கண்ட்ராக்டரா'க இருக்கும்போது, தகப்பன் ஒரு பஞ்சாயத்தில் தலைவர் (பிரசிடெண்டு) ஸ்தானத்திற்கு தேர்தலில் நிற்க முடியுமா?

**பதில்:** முடியும். அப் பஞ்சாயத்துக்கு 'கண்ட்ராக்ட்' வேலை செய்பவர்தான் அதே பஞ்சாயத்துக்கு மெம்பராகவோ, தலைவராகவோ வர முடியாது, [பஞ்சாயத்துச் சட்டம்-செக்ஷன் 16 (2) (c)—செக்ஷன் 21 (6)] மகன் 'கண்ட்ராக்ட்ராக அதுவும் அப்பஞ்சாயத்துக்கு அல்லாமல் ஜில்லா போர்டுக்கு 'கண்ட்ராக்ட'ராக இருப்பதானது, தகப்பன் பஞ்சாயத்துத் தலைவராக வரத்தடையாகாது.] மேலும் கிறிஸ்துவர்களுக்கு 'பாகப் பிரிவினையாகாதகுடும்பம்' என்பதே கிடையாது. 'பிரிபடாத குடும்பம்' என்பது இந்துக்களுக்கும ட்டில்தான் பொருந்தும்.

## பஞ்சாயத்துச் சட்டம்

**131. கேள்வி:** (பால் ராஜ்—தொட்டப்ப நாயக்கனூர்.) (1) தற்போதைய பஞ்சாயத்துச் சட்டப்படி பஞ்சாயத்துத் தலைவருக்குச் சம்பளம் உண்டா? (2) பஞ்சாயத்துத் தேர்தலுக்குப் பொதுத் தேர்தல் விதிகள் பொருந்துமா? (3) தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரை சரியான முறையில் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்று உத்தரவிட யாருக்கு அதிகாரம் உண்டு?

**பதில்:** (1) பஞ்சாயத்துத் தலைவருக்குச் சம்பளம் கிடையாது. (2) பஞ்சாயத்துத் தேர்தல்களுக்குத் தனி விதிகள்

187724

இருக்கின்றன. பொது விதிகள் என்று ஒன்றும் கிடையாது. ஆனால் எவ்விதத் தேர்தல்களிலும் சில செய்கைகள் குற்ற மாகும் என்ற சில ஷரத்துக்கள் இந்தியன் பீனல் கோடு என்ற சட்டத்தில் இருக்கின்றன. அவை சட்டசபைத் தேர்தல்களுக்கும் சரி, முனிசிபாலிடி, ஜில்லா போர்டு தேர்தல்களுக்கும் சரி, பஞ்சாயத்துத் தேர்தல்களுக்கும் சரி - இவை எல்லாவற்றிற்கும் பொருந்தும். (3) பஞ்சாயத்துத் தேர்தல் கமிஷனருக்குத்தான் இந்த அதிகாரம். அநேகமாக ஜில்லா முன்சீப் தான் தேர்தல் கமிஷனர்கள். 1953—"வக்கீல்" மே இதழ் பக்கம் 25-பார்க்கவும்.

### பஞ்சாயத்து மெம்பரை உபாத்தியாயராக நியமிக்கலாமா?

*132.* கேள்வி: (வேத நாயகம்—புளியங்குடி.) பஞ்சாயத்து மெம்பராக இருக்கும் ஒரு ஹையர்கிரேடு ஆசிரியரை, அவ்வூரில் இருக்கும் ஒரு 'மானேஜ்மெண்டு' பாடசாலையில் உபாத்தியாயராக நியமித்துக் கொள்ளச் சட்டம் இடந்தருமா?

**பதில்:** அப்படி நியமித்துக்கொள்ள பஞ்சாயத்துச் சட்டத்தில் தடை ஒன்றுமில்லை.

### பெண்ணுக்கும் ஆண்மக்களைப் போல் வார்சு பாத்தியச் சட்டம் வந்துவிட்டதா?

*133.* **கேள்வி:** (ராம கிருஷ்ணன்—கும்பகோணம்) இந்துவின் ஆண்மக்களைப் போல் பெண்மக்களுக்கும் பாகம் உண்டென்ற சட்டம் பாஸாகி விட்டதா?

**பதில்:** இன்னும் அச்சட்டம் வரவில்லை.

### முப்பது வருடமாக மனைக்கட்டைக் குத்தகை வைத்திருப்பவரை விலக்கலாமா?

*134.* **கேள்வி:** (ஷை) ஒரு மிராசுதாரிடம் ஒரு குடியானவர் ஒரு மனைக்கட்டைக் குத்தகைக்கு ஒப்புக் கொண்டு 30 வருடத்திற்கு முன்பு ஒரு பகுதிச் சீட்டு எழுதிக் கொடுத்திருந்தால், அவரை மனைக்கட்டை விட்டு அகற்ற முடியுமா?

**பதில்:** . முடியும். ஆனால் குத்தகைதாருக்குச் சட்டப்படிக்கான நோட்டீசு கொடுத்து குத்தகை பாத்தியத்தை முடித்துவிட்டுத்-தான் அகற்ற முடியும்.

### லைட் இல்லாமல் சைகிள்

*135.* **கேள்வி:** (ஷை) பஞ்சாயத்து எல்லையில் 'லைட்' இல்லாமல் சைகிளில் சென்றால் போலீசார் சார்ஜ் செய்யலாமா?

**பதில்:** செய்யலாம். (சென்னைப் போக்கு வரத்து விதிகள்—Madras Traffiic Rules—விதி 43.)

### விற்பனைவரி—கைத்தறி ஜவுளி

*137.* **கேள்வி:** (மாணிக்கம்-குடியாத்தம்) ஒரு ஆண்டில் கைத்தறி ஜவுளி ரூ. 2,00,000க்கு விற்பனை நடந்தது. அதற்குள்ள 'டர்ன் ஓவர்' லைசென்சு ரூ. 250 செலுத்தியாகி விட்டது. ஷை விற்பனை 'டர்ன் ஓவரி'ல் சில்லறையாக ரூ. 2800க்கும், மீதி லைசென்சு பார்டிகளுக்கும் விற்பனை ஆகி இருக்கிறது. இதில் சில்லறை விற்பனை ரூ. 2800க்கும் தனி வரி உண்டா?

**பதில்:** விற்பனை வரிச் சட்டத்தின் செக்ஷன் 5 (iii)ன் படி லைசென்சு வாங்கிக்கொண்ட கைத்தறி ஜவுளி வியாபாரியானவர் இந்த ராஜ்யத்திலுள்ள மொத்த வியாபாரிக்கோ சில்லறை வியாபாரிக்கோ விற்பனை செய்யும் கைத்தறி ஜவுளிக்கு (லைசென்சு கட்டணத்தைத் தவிர வேறு) விற்பனை வரி கொடுக்க வேண்டியதில்லை. ஆனால் அவர் கிராக்கிகளுக்கு நேரடியாக விற்கும் விற்பனைத் தொகைக்கு—அதாவது ஒரு மொத்த வியாபாரியோ சில்லறை வியாபாரியோ அல்லாத ஒருவருக்கு விற்கும் விற்பனைத் தொகைக்கு—அவர் விற்பனை வரி கொடுக்கவேண்டும். இவ்வித விற்பனையானது லைசென்சில் சேர்ந்ததல்ல. ஆனால் மொத்த வியாபாரத் தொகையில் லைசென்சுப்படி வியாபாரம் நடந்த தொகை போக பாக்கி இருக்கும் நிகர வியாபாரத் தொகையானது. (Net Turn over) ஒரு வருடத்தில் ரூ. 10,000க்குட்பட்டு இருந்தால் அத்தொகைக்கு விற்பனை வரி கிடையாது. ஆகையால் லைசென்சில் சேராத சில்லறை வியாபாரம் ரூ. 2800க்கும் விற்பனை வரி கிடையாது. (விற்பனை வரிச்சட்டம் செக்ஷன் 3 (3)—டர்ன் ஓவர் விதி—5 (1)

PRINTED BY N. RAMARATNAM, M.A., B.L., AT THE MADRAS LAW JOURNAL BRANCH PRESS, TIRUVIDAIMARUDUR, AND PUBLISHED BY R. NARASIMHAN, B.A., B.L., AT NO. 73, DABIR WEST STREET, KUMBAKONAM, OF SOUTHERN BOOK HOUSE LTD. Editor:—V. S. VIJAYARAGHAVACHARI, B. A., B. L.

நாகரீக நூதன பார்டர்களில்
கண்ணைக் கவரும்
மனோகரமான வேலைப்பாடுள்ள

**பட்டு ஜவுளி தினுசுகள்**

குறைந்த விலையில் கியாரண்டியுடன்
—கிடைக்குமிடம்—

# ராணி
# ரெங்கய்யர்
# சன்ஸ்

கைத்தறி-பட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள்
கெருடலாயத் தெரு,
**கும்பகோணம்.**

பிராஞ்சு:—
20, லக்ஷிமிபுரம் 2-வது தெரு,
மதுரை.

---

பெங்களூர்
காஞ்சீபுரம்
கும்பகோணம்
பட்டுச் சேலைகள்
நூதன பார்டரில்
ஏராளமாக
ஸ்டாக் செய்திருக்கிறோம்.

# ரெங்கமூர்த்தி
# கம்பெனி

கெருடலாயத் தெரு,
**கும்பகோணம்.**

பிராஞ்சுகள்:—
காரைக்குடி, நாட்டரசன்கோட்டை.






ஸ்டார் புகையிலை கம்பெனி
மார்க்
ஸ்டார் புகையிலை
TRADE MARK
சிவபுரி
புதுக்கோட்டை

**சுவைப்பதற்கு**
**மனோரம்மியமானது**

# ஸ்டார் புகையிலை கம்பெனி,
உரிமையாளர்கள்:—
**மீ.ந.அ.செய்யது இப்ராம்ஸா & சன்ஸ்**
தபால்பெட்டி நீ. 20.
**புதுக்கோட்டை.**

REGD. NO. M. 5399. THE "VAKIL" 6c JULY 1953

ஸ்தாபிதம் 1909 போன் நெ. 57 தந்தி விலாசம் "கோகுல்"

REGISTRAR OF BOOKS
1953
MADRAS

# டி. எஸ். ஆர். & கோ.

## கும்பகோணம்.

REGISTERED
TRADE MARK



பிராஞ்சு : (மன்னார்குடி)

கூந்தலுக்கு வளர்ச்சியையும் மூளைக்கு குளிர்ச்சியையும்
கொடுப்பதில் நிகரற்ற
சந்தனாதித்தைலம், அரைக்கீரைவிதைத் தைலம்,
கோகுல் கூந்தல் தைலம்
வாசனைப்பாக்கு, பல காய்கறி ஊறுகாய், ரோஜாப்பூ குல்கந்து, ஊதுவத்திகள்
பன்னீர் இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

*Sole Agents:*

For Madras
SURAJ AGENCIES
MADRAS

For Coimbatore, Palghat & Nilgiris.
B. BALAPATTABI CHETTIAR,
246, VYSYAL STREET, COIMBATORE.

PRINTED AT THE MADRAS LAW JOURNAL PRESS, TDR.